
|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 14 குரோதி ஸூ மாசி - பங்குனி மீ மார்ச் 2025 இதழ் 3



ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி
கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## மாசி – பங்குனி


மலர் 14 மார்ச் 2025 இதழ் 3


பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல் | 6 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 8 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 11 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 14 |
| ஸ்ரீ பாதஸப்ததி | 15 |
| வேத ஸூக்தங்கள் | 19 |
| ஆபஸ்தம்ப ஸூத்ரம் | 21 |
| பங்குனி மாத விசேஷ தினங்கள் | 25 |
| அநுகீதாபர்வம் | 26 |
| சுகநாஸ உபதேசம் | 29 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 33 |
| ஆச்சார்ய பரம்பரை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 43 |
| கற்பின் சிகரங்கள் பேசினால் | 45 |
| முக ஸாரம் | 47 |
| தாடங்க ப்ரதிஷ்டை | 49 |
| ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பா ஸமேத ஸ்ரீ காயாரோஹணேஸ்வரர் கோயில் விஜயம் | 54 |
| புன்னை நல்லூர் மாரியம்மன் திருக்கோயில் விஜயம் | 55 |
| மஹா கும்பமேளா ஸ்நானம் | 56 |






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா

வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/– |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/– |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/– |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/– |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/– |
| புரவலர் | ரூ. 10000/– |

(விவரங்கள் உள்ளே)

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

***தேவ ஸ்மரந்தி தவ யே தேஷாம் ஸ்மரந்தோபி நார்திரிதி கீர்திம்***
***கலயஸி ஸிவ பாஹீதி க்ரந்தன் ஸீதாம்யஹம் கிமுசிதமிதம் ।।***

*ஹே! பரமேஸ்வரா உன்னை எவர்கள் நினைக்கிறார்களோ அவர்களை நினைப்பவர்களுக்குகூட கஷ்டம் வராது என்ற கீர்த்தியை நீர் வஹிக்கிறீர். நானோ ஹே பரமசிவா என்னைக் காப்பாற்றும் என்று கதறிக் கொண்டிருந்த போதிலும் கஷ்டத்தையே அடைகிறேன். இது உமக்குப் பொருந்துமா?*

***ஆதிஸ்யாகக்ருதௌ மாமந்தர்யாமின் நசாவகாத்மேதி***
***ஆர்த்திஷு மஞ்சயஸே மாம் கிம் ப்ரூயாம் க்ருபைக பாத்ரமஹம் ।।***

*உள்ளில் நின்று தூண்டுபவனே என்னை பாவங்கள் செய்ய தூண்டிவிட்டு 'இவன் பாபம் செய்தவன்' என்று என்னை துக்கங்களில் முழுகும்படி செய்கிறீர். இவ்விதம் செய்தால் உமது க்ருபைக்குப் பாத்ரனாகிய நான் இது விஷயமாய் என்ன சொல்வேன் ?*

*[ஸ்ரீதர ஐய்யாவாளின் ஆர்த்திஹர ஸ்தோத்ரம்]*

*ஹே கிரிதர கோபாலா ! பக்தர்களின் தேவனே! பக்தவத்ஸலனே ! என்னை தூய்மையாக்கு. என் பாவங்களை தூய்மையாக்கு. மன்னிப்பு, மன ஏகாக்ரம் என்னும் அழுக்கு நீக்கிகளால் த்யானம் என்னும் சவர்க்கத்தால் [soap] என்னை அலம்பு. போக்கும் வரவும் இல்லாத நிலை எனக்கு வர அலம்பித் தூய்மையாக்கு.*

*சுழுமுனை என்னும் கட்டத்தில் என்னை அலம்பு. இந்த சரீரக் கூட்டில் மனது அடைபட்ட கிளியாக உள்ளது இந்த வாழ்க்கை. சில நாட்கள்தான். கிரிதரன் என் தேவன். மீரா அவனது அடிமை. குன்றம் ஏந்தி குவலயம் காத்தவன் என் தேவன். ப்ரபோ ! என்னை தூய்மையாக்கு.*

*பக்த மீரா*

# ஆசிரியர் பக்கம்

## *க்ஷீணமான ப்ராம்மணத்வம்*

*ப்ராம்மணர்களின் சதவிகிதம் குறைவானதுதான். ஆனால் அவர்கள் செய்யும் அதிகாரம் அதிகமானது. இப்படி ஒருவாதம். 'ஏம்பா இப்படி தவிக்கிற. சந்தேகம்னா ஐயரைக் கேளு. சாஸ்த்ரம் படிச்சவரு சொல்லுவாரு'' இப்படியும் ஒரு வாதம்.'* Yes I am a Brahmin but I don't follow the Rituals. They are outdated, Superstitions. *சிலர் இப்படி. இன்னும் சிலர் மடி ஆசாரம் இதெல்லாம் என்ன? மனசு சுத்தமானதா இருந்தா போதும். நாங்கள் ப்ராம்மணர்களை வெறுக்கவில்லை. ப்ராம்மணீயத்தைத்தான் வெறுக்கிறோம். இது நாஸ்திகர்களின் வசனம். ஈயமும், பித்தளையும் வந்துவிடும்.*

*மேலே குறிப்பிட்ட விஷயங்கள் ப்ரபலமானவை. கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முன் கட்டுக்கோப்பாக இருந்த ப்ராம்மண சமுதாயம் பிளவுபட்டு உள்ளது. பல அரசியல் நெருக்கடிகளால் மேல் நாட்டிற்கு சென்று விட்டது. அங்கு விமரிசையாக ப்ராம்மணத்வத்தைக் கடைபிடிக்கிறார்கள். மகிழ்ச்சியே. ஆனால் அவர்களுக்குத் தெரியாது பலன் பூஜ்யம்தான் என்று. மகா பெரியவா சொல்வது போல் க்ராமத்தாரை விட பட்டணத்துக்காரா பூஜை புனஸ்காரம் வைத்துக் கொண்டிருக்கா. அவர்களுக்கு ஒரு குற்ற உணர்வு. அதான் காரணம். அதே மாதிரி மேல் நாட்டுக்குச் சென்ற அந்தணர்கள் பண்டிகைகள், ஸ்ராத்தம் அனைத்தையும் விமரிசையாகச் செய்கிறார்கள்.*

*இதுவும் குற்ற உணர்வுதான். இங்கு இருக்கும் அந்தணர்களின் மனப்பாங்கு என்ன? ஏதோ பரம்பரையாக குலத்தில் வந்திருப்பவர்கள் ஸ்ரத்தையாக அனுசரிக்கின்றனர். மற்றவர்கள் மேம்போக்காகத்தான் அனுசரிக்கின்றனர். இதனால் ப்ராம்மணத்வம் க்ஷீணமாகிவிட்டது. என்னெவென்று பார்ப்போம்.*

*பட்டணத்தை நோக்கி வந்தபின் அக்ரஹாரங்கள் நஷ்டமாயின. ஆசாரமும், நஷ்டம். கோவில்களை பராமரிக்க ஆளில்லை. தனி மனிதனாகிய ப்ராம்மணன் முக்யமாக சந்த்யா வந்தனத்தை விட்டான். நித்ய கர்மானுஷ்டத்தைக் காணோம். உபநயனங்கள் விமரிசையாகவும், சமஷ்டியாகவும் நடைபெறுகின்றன.*

*ப்ரம்மசாரிகளுக்கு நித்ய கர்மானுஷ்டானத்தைச் சொல்லித் தருவதில்லை. சினிமாக்களிலும், கதைகளிலும் ப்ராம்மணன் அசிங்கப்படுத்தப்படுகிறான். தன் கோத்ரம், ஸூத்ரம் எத்தனையாவது தலைமுறை என்பதும் தெரிவதில்லை.*

*மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டியவன் ப்ராம்மணன். அவன் பிறழ்ந்தால் மற்ற சமூகங்கள் பிறழும். இன்றளவும் மற்ற ஸமூகங்கள் ஸத் ப்ராம்மணனை கொண்டாடுகிறார்கள். ஏன் ப்ராம்மணத்வம் போகக் கூடாது. பகவத் பாதர் தனது கீதா பாஷ்யத்தில் கூறுகிறார் :-*

*'' அந்த பகவான் இவ்வுலகைப் படைத்து அதனை நிலைப்பெறச் செய்பவராய் முதலில் மரீசி முதலிய ப்ரஜாபதிகளை படைத்து, வேதத்தில் கூறிய ப்ரவ்ரித்தி தர்மத்தைக் கைக் கொள்ளச் செய்தார். பின்பு ஸனகர், ஸனந்தனர் முதலிய மற்றாரையும் படைத்து ஞான வைராக்யங்களைக் குறிப்பாக 'நிவ்ருத்தி' என்னும் தர்மத்தைக் கைக்கொள்ளப் பண்ணினார். இந்த இருவகைத் தர்மமே உலகை நிலைப்பெறச் செய்வது. ப்ராணிகளுக்கு நன்மை தருவது. இதையே ப்ராம்மணர் முதலானவர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருவது.*

*அனுஷ்டிப்பவர்களின் காமக் கிளர்ச்சியால் விவேக புத்தி தேய, தர்மம் குறைய அதர்மம் மேலிட்டு வர ஜகத்தைக் காப்பாற்ற எண்ணிய நாராயணனாகிய விஷ்ணு பகவான் ப்ராம்மண்யத்தைக் காப்பாற்றும் பொருட்டு தேவகியினடத்தில் க்ருஷ்ணராக அவதரித்தார். ஏனெனில் 'ப்ராம்மண்யம் பாதுகாக்கப்படுமாயின் வர்ணாஸ்ரம பேதங்கள் சார்ந்த வைதிக தர்மம் பாதுகாக்கப்பட்டதாகும்''*

*இப்படிப்பட்ட ப்ராம்மணத்வம் இன்று க்ஷீண தசையில் உள்ளது. சுருதிகளும், ஸ்ம்ருதிகளும் காட்டிய ப்ராம்மணத்வம் உயர்ந்தது. இன்று கீழ் மட்டமாயுள்ளது. இன்று இருக்கும் ப்ராம்மணர்கள் வெறும் 'ப்ராம்மண பந்துக்களே' அதாவது வெறும் பெயரளவில் ப்ராம்மணர்கள். இந்நிலை மாறுவது எப்போது? தீர்வு உண்டா? முடியுமா? இந்த கேள்விகளுக்கு ஸ்ரீ விஜயேந்தர ஸரஸ்வதி ஸ்வாமிகள் கர்நாடகாவில் ப்ராம்மண சங்கத்தில் ஏழு கட்டளைகளை கூறியுள்ளார். அவை பற்றி அடுத்த இதழில் விரிவாகப் பார்ப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*


***ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர !***

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## தேசிய இலட்சிய வாசகமாக வேதவாக்கு

மகிழ்ச்சிக்குரிய மற்றொன்று, தேசத்தின் இலட்சிய வாசகமாகவே உபநிஷத வாக்கான 'ஸத்யமேவ ஜயதே' என்பதைத் தேர்ந்தெடுத்திருப்பதாகும். இதனால் உண்மையே வெல்லும் என்பது சநாதன தர்மத்தின் ஆதார சாத்திரமாம். வேதத்தின் பெரும் பிரமாணத்திலேயே மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இங்குங்கூட அந்த நவீன மனப்பான்மையாளருக்கு உரிய விதத்திலேயே, மத சாத்திரம் – தத்துவ சாத்திரம் என்று மேநாட்டார் வேறுபடுத்திக் கூறும் இரண்டில் இவ்வாசகம் ஹிந்து மதமாகக் கொள்வதற்கின்றி எல்லோருக்குமுரிய தத்துவ சாத்திரமாயும், அதோடு உலகெங்குமே ஒரு நன்னெறியில் கருத்து என்ற அளவில் வழங்கப்படுவதாயுமிருப்பதாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பேசப்பட்டது. எவ்விதமாயினும் மறைமொழியே தேசிய இலட்சிய வாசகமாயிருப்பதைப் பாராட்டுகிறோம்.




## தர்ம சக்கரமா? ஆலைத் தொழில் சக்கரமா?

சக்கரத்தைத் தேர்ந்தெடுப்பதில் சங்கேதமாக மற்றுமொரு கொள்கையும் தெரிவிக்கப்படுகிறதோ என்று ஐயுறுவோரும் உள்ளனர். நம்முடைய 'தேசாசாரம்' என்ற பிரத்தியேக மரபு எளிய வாழ்க்கைதான் என்றும், இயந்திர உதவியை நாடாது, எளிய வாழ்க்கைக்கான சிறிய அளவினதான உபகரணங்களை, பெருத்த ஜனத்தொகை படைத்த நம் நாட்டில் முக்கியமாக மக்களின் உடலுழைப்பிலிருந்தே கைத் தொழிலாகத்தான் பெற வேண்டும் என்றும் சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் முதலிடம் கொண்ட மஹாத்மா கருதினார். அந்தக் கருத்துக்கு உருவகமாகக் குடிசைத்

தொழிலாக உடலுழைப்பின் மூலம் நடக்கும் நெசவுக்குத் தேவைப்படும் எளிய கருவியான கைராட்டையாம் சர்க்காவைத் தமது கட்சியின் கொடி நடுவில் பொறிக்கச் செய்தார். ஆனால் அவ்வழிக்கு மாறாக, மேநாட்டுப் பாணியில் பெருக்கமான சுகபோக சாதனங்களுடன் வாழ்க்கை நடத்தும் முறையையே சுதந்திர பாரதத்தில் நிறுவ விரும்புகிறோம் என்றும், அதற்குத் தேவையான ஏராளமான உபகரணங்களைப் பெரிய பெரிய இயந்திரங்கள் செயற்படும் ஆலைத் தொழில் மூலமே பெறச் செய்வோம் என்றும் காட்டும் முகமாகவே ஆலை இயந்திரத்திற்கும் அடையாளமாகவுள்ள சக்கரத்தை – 'சக்ரா'வை – சர்க்காவின் இடத்தில் நவீனக் கொள்கைக்காரர்களான தலைவர்கள் பொறித்துள்ளனரோ என்பதே அந்த ஐயம்.

(தொடரும்)


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail :
office@vrnt.org <mailto : office@vrnt.org>
Phone : 044 - 24740549

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## மாணவர்களின் வாழ்க்கை

சைக்கிளில் செல்பவர்கள் முதலில் கொஞ்ச தூரம் சைக்கிளைத் தள்ளிச் சென்று மெதுவாக ஏறி உட்காருவார்கள். உட்கார்ந்தவுடன் மெதுவாக பெடல் செய்யத் தொடங்கிப் பிறகு வேகமாக பெடல் செய்வார்கள். பிறகு பெடலே செய்யாமல் சைக்கிளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சந்தோஷமாக உட்கார்ந்து கொண்டு செல்வார்கள். பிறகு பெடல் செய்வார்கள் கொஞ்ச நேரம்; பெடல் செய்யாமல் போவார்கள் கொஞ்ச நேரம்; இது சமயம் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் நிறையப் போக்குவரத்துக்கள் உண்டு. அத்தனையும் கவனித்துக் கொண்டு ஜாக்கிரதையாக ஓட்டிச் செல்வார்கள். இவ்விதமாகச் சென்று கடைசியில் மெதுவாகச் சென்று மெள்ள இறங்கி, இறங்கியதும் சைக்கிளுடன் இரண்டடி சென்று நிற்பார்கள்.

இதுபோல், மாணவர்களுடைய வாழ்க்கையும் சிறிதாகத் தொடங்கி பிறகு வேகமாக வளர்ந்து, பிறகு கொஞ்சம் கொஞ்சமாகச் சோதனைகள் ஏற்பட்டு அவை எல்லாவற்றையும் தாண்டி பிறகு வேகமாக வளர்ந்து பிறகு நிதானமாக ஓய்வு பெறுகிறார்கள். சிறுவயதில் பள்ளிக்குச் செல்வதற்கு விருப்பம் இருக்கும். ஆனால் படிப்பதற்கு விருப்பமிருக்காது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நல்ல வார்த்தைகளெல்லாம் சொல்லிப் படிக்க வைக்கிறோம், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து வந்தவுடன் யௌவன வயது வருகிறது. அப்பொழுதும் பள்ளிக்குச் செல்ல விருப்பமுண்டு. ஆனால் படிக்க

விருப்பமிருக்காது. சிறிய குழந்தைகளாய் இருந்தால், அதட்டி உருட்டி மிரட்டிப் படிக்க வைக்கலாம். இளைஞர்களை அவ்விதம் படிக்க வைக்க முடியாது. பரீக்ஷை நெருங்கி விட்டால் இளைஞர்கள் குழந்தைகள் எல்லோருமே வேகம் வேகமாகப் படிப்பார்கள். பாஸ் ஆக வேண்டுமேயென்று கவலையும் ஏற்பட்டு விடும். பாஸ் ஆன பிறகு மிகுந்த சந்தோஷம் அடைவார்கள். பாஸ் ஆவதற்குப் பிரார்த்தனைகூடப் பலர் செய்வார்கள். பெயில் ஆகிவிட்டாலோ மிகுந்த துன்பத்திற்கு உள்ளாவார்கள். சிலர் துன்பம் தாங்காமல் தற்கொலைகூடப் பண்ணிக்கொண்டு விடுகிறார்கள். அல்லது எங்காவது ஓடிவிடுகிறார்கள்.

இந்தக் கஷ்டங்களெல்லாம், துன்பங்களெல்லாம் வராமல் ஒழுங்காக பாஸ் ஆகவேண்டுமென்றால்- நல்ல முறையில் பாஸ் ஆகவேண்டுமென்றால் தினந்தோறும் பள்ளிப் பாடங்களை நன்றாகப் படிக்க வேண்டும். இரவில் அதிக நேரம் படிக்காமல் காலை வேளையில் நன்றாகப் படித்தால் படித்த பாடம் மனத்தில் நிற்கும். காலையிலும் மாலையிலும் தீபம் வைத்த பிறகும் கடவுள் ஸ்தோத்திரங்களைச் சொல்லி விட்டு பிறகு பள்ளிப் பாடங்களை நன்றாகப் படிக்க வேண்டும். தீயமாணவர்களுடன் சேரக்கூடாது. பொய் பேசுபவர், திருடுபவர் — ஒழுக்கமில்லாதவர் - 'கோபமுள்ளவர்' சண்டையில் பிரியமுள்ளவர், வீட்டிற்கு அடங்காத பிள்ளைகள் — ஆசிரியருக்கு அடங்காத பிள்ளைகள் — சோம்பேறியாய் ஊர் சுற்றும் பிள்ளைகள் — கிண்டலாகப் பிறரைப் பரிகசிக்கும் பிள்ளைகள் போன்றவர்களுடன் நட்பு வைத்துக் கொள்ளக் கூடாது.

ஒழுக்கமுள்ள பிள்ளைகள் உண்மை பேசும் பிள்ளைகள் — பிறர் பொருளை எங்கேனும் கண்டாலும் அந்தப் பொருளுக்குச் சொந்தமானவரிடம் ஒப்புவிக்கும் விருப்பமுள்ள பிள்ளைகள் இன்பமாகப் பேசும் பிள்ளைகள் - எளிமையாக வாழும் பிள்ளைகள் - சுறுசுறுப்பாய் இருக்கும் பிள்ளைகள் கடவுள் பற்றுள்ள பிள்ளைகள் வீட்டிலும் ஆசிரியரிடமும் நற்பெயர் வாங்கும் பிள்ளைகள் - போன்றவர்களுடன் சிநேகம் வைத்துக் கொள்ள வேண்டும். படித்துப் பரீக்ஷை எழுதுவது என்பது சிலகாலம்தான். அந்தக் காலத்தை நாம் சோம்பேறித்தனமாய் போக்கிவிட்டால்,

திரும்பவும் அந்தக் காலம் நமக்குக் கிடைக்காது. ஒரு நிமிஷமானாலும் அந்த நேரத்தை நல்ல பணிக்குச் செலவிட வேண்டும். ஒரு பைசாவானாலும் அதை வீணாக்காமல் சேமித்து வைத்து நல்ல பணிக்கு உபயோகப்படுத்த வேண்டும்.

நகத்தைக் கடிக்கக் கூடாது. கழுத்தில் அணியும் சங்கிலியைக் கடிக்கக் கூடாது. உணவு உட்கொண்டவுடனும் சிறுநீர் கழித்தவுடனும் கை கால்களைக் கழுவிக் கொள்ளாமல் இருக்கக்கூடாது. நல்ல அறிவு தரும், நீதிதரும் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். வீட்டில் பெரியோர்கள் வாங்கும் பத்திரிகைகளைப் படிக்கக் கூடாது. படிக்கும் காலத்தில் அரசியல் பக்கமே போகக் கூடாது. நின்றுகொண்டு தண்ணீர் குடிக்கக் கூடாது. டம்ளரில் வாயை வைத்து சூப்பி, தண்ணீர் குடிக்கக் கூடாது. நாம் உணவு உட்கொள்ளும் தட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏழை எளிய மாணவர்களிடம் அன்போடு பழகி நம்மாலான உதவிகளை அளிக்க வேண்டும். இதுபோன்ற நல்ல குணங்களை வளர்த்துக் கொண்டு ஒழுங்காக, தினந்தோறும் படித்து வந்தால் பரீக்ஷையில் பாஸ் செய்வது கஷ்டமல்ல. இந்த ஆண்டு எல்லோரும் நன்றாகப் படித்து பரீக்ஷை எழுதி பாஸ் செய்து விடுமுறை காலத்தில் நல்ல பயிற்சிகளெல்லாம் பெற்று நல்ல மாணவர்களாக வளர வேண்டும்.

## சந்தா விவரம்

**SRI KAMAKOTI KOSASTHANAM**
**INDIAN BANK**
**SRI SANKARA MUTT BRANCH**

SB Account : 6005671674 IFSC Code : IDIB000S085

சந்தாவினை புதுப்பிப்பவர்கள் மற்றும்
புது சந்தாவிற்கு மேலே உள்ள வங்கி கணக்கிற்கு செலுத்தி
kamakotipradeepam@gmail.com
அல்லது
900384 5456 (Whattsapp) அனுப்பி வைக்கவும்

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## காசி தமிழ் சங்கம் விழா - 15.02.2025



ஆதி சங்கரர் காலடியிலே கேரள தேசத்திலே பிறந்து, காசிக்குச் சென்று, அங்கு தங்கியிருந்து, பாஷ்யங்களை எழுதி, ஞான மார்க்கத்தை, பக்தி மார்க்கத்தை, அனுஷ்டான மார்க்கத்தை பிரசாரம் செய்த இடம் அந்த காசி. அந்த காசி நகரின் சிறப்பை ஆதி சங்கரர் உயர ஸ்லாகித்து சொல்கிறார்கள்.

**கங்கா தீர மனுதம்மித சகலம்**
**தத்ராபி காஷி உத்தமா**

அந்த கங்கையுடைய கரை முழுவதும் உயர்ந்தது, சிறப்பானது என்று குறிப்பிடுகிறார். **தத்ராபி காசி உத்தமா** - அந்தக் கரையிலும் காசிக் கரை மிகச் சிறந்தது. அந்தக் காசியிலும் மணிகர்ணிகா காட் மிகச் சிறந்தது. எந்த இடத்திலே, அந்த மணி கர்ணிகா காட் பக்கத்திலே, விஸ்வேஸ்வரன் இருக்கிறாரோ, அந்த விஸ்வநாதர் இருக்கக் கூடிய அந்த கங்கைக் கரை என்பது மிக மிகச் சிறப்பானது என்பதாக ஆதி சங்கரர் அவர்களால் பாடப்படுகிறது. அந்த கங்கையின் சிறப்பை கங்காஷ்டகம் என்றும், ஜோதிர்லிங்க ஸ்தோத்திரத்திலே

**वाराणसीनाथमनाथनाथं श्रीविश्वनाथं शरणं प्रपद्ये**

**வாராணஸீநாத²மனாத²நாத²ம் ஸ்ரீவிஸ்வநாத²ம் ஸரணம் ப்ரபத்யே**

ஏனென்றால் அனைத்து மக்களுக்கும் ஒரு நல்ல மார்க்கத்தை, புண்ணியத்தை, ஞானத்தை அளிக்கக் கூடியவர் விஸ்வநாதர். விஸ்வம் என்றால் உலகம். நாதன் என்றால் பிரபு. அனைவருக்கும் அவர் பிரபுவாக இருந்து, அனைவரையும் ரட்சித்து, அனைவருக்கும் மந்திர உபதேசம் செய்து — ஆனந்தம், ஆனந்தம் — அனைத்து தோஷங்களையும் நீக்கி, பழுது நீக்கி, வாழ்க்கையில் துணை இருப்பது — அது நண்பர்கள், குடும்பம் — ஏதோ ஒரு விதத்திலே குறை இருக்கிறது. திக்கு தெரியாதவர்களுக்கு கூட அனுக்ரஹம் செய்யக் கூடியவர் அந்த விஸ்வநாதர். அப்படிப்பட்ட இந்த காசியிலே காசி தமிழ் சங்கம் என்பாதாகிய ஒரு அமைப்பினை நம்முடைய பாரதப் பிரதமரின் அபிப்ராயத்தின் பேரிலே, மனிதவள மேன்பாட்டுத் துறை, சென்னை IIT யின் ஒருங்கிணைப்பிலே, கடந்த சில ஆண்டுகளாக,. பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, **தென்னாட்டுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி** என்பதாக இந்த மகாகவி பாரதியார் முதற்கொண்டு, பலரும் அண்மை காலத்திலே வலுப்படுத்திய, தெய்வீக, தேசிய கருத்துக்களை பலப்படுத்துவதற்காக செயல்பட்டு வருகிறது. பலருக்கும், இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும் சம வாய்ப்பை அளித்து, பல துறை வல்லுனர்களையும் அங்கு அழைத்துச் சென்று, தரிசனங்களை செய்து வைத்து, மிகப்பெரிய லௌகீக, மற்றும் புண்ணியமான காரியங்களை செய்து வருகிறார்கள். இந்த காசித் தமிழ் சங்கம் வழியாக ஒரு சிறந்த ஏற்பாட்டினை செய்து வருகிறார்கள்.

அந்த முக்கியத்துவத்தை, காசி — ராமேஷ்வர யாத்திரை முக்கியத்துவத்தை, அந்த கலாச்சார ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும் முயற்சியிலே ஈடுபட்டு இருக்கக் கூடிய இந்தப் பணி சிறந்த பணி. பலரும் வேலை செய்தாலும் ஒருமித்த கருத்துடன் வேலை செய்யும் போது, அதனுடைய பலன், அதனால் வரக்கூடிய நிம்மதி மிகப் பெரியது. அப்படி நம்முடைய நாட்டிலே, அந்த ஒற்றுமையை வலுப்படுத்தக் கூடிய அதுவும் இந்த வருஷம் மகா கும்பமேளா சமயத்திலே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரமுகர்களை வரவழைத்து — நீதிபதிகள் , மந்திரிகள் பல பெரிய மனிதர்களையும் வரவழைத்து, இந்த நிகழ்ச்சியை நடத்த இருக்கிறார்கள். சித்த மருத்துவத் துறையை சார்ந்தவர்கள் நிறைய பேரை அழைத்து உள்ளார்கள். போன வருஷம் ஒவ்வொரு team ; இருந்து கூட்டிச் செல்கிறார்கள் அது ஒன்று. அகஸ்தியரை இந்த வருஷத்து அந்த காசித் தமிழ் நிகழ்ச்சியிலே முதன்மைப்படுத்துகிறார்கள்.

அந்த அகஸ்தியர் என்பவர் ஆன்மீகத்திலே முக்கியமானவர். சக்தி படைத்தவர். சமுத்திரத்தை கரைத்துக் குடித்தவர். தமிழை வளர்ப்பதற்கு அருளிச் செய்தவர். பல ஊர்களிலும் இறைவனை பூஜித்து, அகத்தீஸ்வரர் என்பதாக பல இடத்திலேயும் அவருடைய மகிமை நமக்கு காணக் கிடைக்கிறது. மருத்துவத்திற்கும் முக்கிய ரிஷி அவர். ஸ்ரீ வித்யா க்ரமத்திலேயும் அவருக்கு முக்கியத்துவம் உண்டு. இப்படி மூர்த்தி சிறியது, கீர்த்தி பெரியது என்பதற்கு அவரொரு உதாரணம். அந்த அகஸ்தியரின் சிறப்பை விளக்கக் கூடிய, இந்த மகாகும்பமேளா சந்தர்பத்திலே, கோடான கோடி பக்தர்கள் என்று நாம் பத்திரிகைகளிலே எழுதி வருகிறோம்.

அதை வாஸ்தகமாக கண்கூடாக பார்க்கக் கூடிய அற்புதமான, அதிசயமான, அனுக்ரஹத்தை கங்கா தேவி வள்ளலாக இருந்து அளிக்கக் கூடிய திவ்ய சந்தர்ப்பம் , இந்த மகா கும்பமேளா இந்த சந்தர்ப்பத்திலே நடக்கக் கூடிய இந்த நிகழ்ச்சியின் மூலமாக, இதிலே ஈடுபட்டு இருக்ககூடிய ஆளுநர் ரவி அவர்கள், IIT இயக்குனர் காமகோடி அவர்கள் மற்றும் அவருடன் சேர்ந்து இதற்கு எல்லாம் உறுதுணையாக இருக்கக் கூடிய CUB காமகோடி, சாஸ்திரா பல்கலைக்கழகம் இப்படி பலரும் சேர்ந்து, வியாபார பெருமக்கள் நல்லி குப்புஸ்வாமி செட்டி பலரும் இதில் சேர்ந்து இருக்கிறார்கள். அனைவரும் இந்த நல்ல பணிகளிலே ஈடுபட்டு இருக்கக் கூடிய அனைவரும் இறைவனின் அருளைப் பெற்று மேன்மேலும் நம்முடைய தேசம், நம்முடைய தர்மம், நம்முடைய கலாச்சாரம், நம்முடைய பாரதீய பிரஜைகள் அனைவரும் மேன்மேலும் சிறப்பை பெறுவதற்கு **கன்யா கல்மஷ நாசினி பகவதி, பாகீரதி தேவி கங்கை ப்ரசீத** என்கிற அந்த கங்கா தேவியை பிரார்த்திக்கிறோம்.

**ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர**

**தென்னாடுடைய சிவனே போற்றி**

**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्ना:

**चिन्ता नास्ति किल तेषाम् चिन्ता नास्ति किल**

**शमदमकरुणासम्पूर्णानाम् साधुसमागमसम्कीर्णानाम् (चिन्ता)**

**कालत्रयजित कन्दर्पाणाम् खन्डितसर्वेन्द्रियाणाम् (चिन्ता)**

**फरमहम्सगुरुपदचित्तानाम् ब्रह्मानन्दाम्रुतमत्तानाम् (चिन्ता)**

**சிந்தா நாஸ்தி கில தேஷாம் சிந்தா நாஸ்தி கில**

சமதமகருணா ஸம்பூர்ணானம் ஸாதுஸமாகமஸம்கீர்ணானாம் (சிந்தா)

காலத்ரயஜித கந்தர்பாணாம் கிண்டிதஸர்வேந்த்ரியதர்பாணாம் (சிந்தா)

பமஹம்ஸகுருபதசித்தானாம் ப்ரஹ்மானந்தாம்ருதமத்தானாம் (சிந்தா)

பொருள் : கவலை இல்லையன்றோ அவர்களுக்கு கவலை இல்லையன்றோ அடக்கம் ஒடுக்கம் கருணை இவற்றால் நிரம்பியவர்களுக்கு கவலை இல்லை. ஸாதுக்களின் சேர்க்கையால் மதம் பிடித்தவர்களுக்கு கவலை இல்லை.

முக்காலத்திலும் மன்மதனை வென்றவர்களுக்கும், அனைத்து இந்த்ரியங்களின் கொழுப்பை அடக்கியவர்களுக்கும் கவலை இல்லை. பரமஹம்ஸர்களான குருவின் பாதங்களில் சிந்தனையுடையவர்களுக்கும் பரம்மானந்தமாகிய அமிழ்தத்தால் மதம் பிடித்தவர்களுமானவர்களுக்கும் கவலை இல்லை.

# ஸ்ரீ பாதஸப்ததி-3

ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

பி. ஆர். கண்ணன்

**ஆருண்யம் யதி$^3$த$^3$ம் த்வதீ$^3$யபத$^3$யோராபா$^4$தி தத்கேசந**
**ப்ராஹுஸ்துங்க$^3$நிதம்ப$^3$பா$^4$ரப$^4$ரணக்லாந்த்யா கிலோபாக$^3$தம் ।**
**அந்யே மாஹிஷமூர்த்$^3$த$^4$பேஷமிலிதம் ரக்தத்$^3$ரவம் மந்வதே**
**மந்யேSஹம் து நதேஷு ஸாந்த்$^3$ரமநுராகோ$^3$த்$^3$கா$^3$ரமேவாநயோ: ॥**

''சங்கரி! இந்த சிவப்பு நிறம் உங்கள் பாதங்களில் எப்படி நன்றாக பிரகாசிக்கிறது? உங்கள் பெருத்த பின்பாகங்களின் அதிக எடையைத் தாங்குவதில் ஸ்ரீபாதத்தின் சிரமமே இதற்குக் காரணம் என்று சிலர் கூறுகிறார்கள். நீங்கள் மகிஷாசுரனின் மீது கால் வைத்தபோது, அவனுடைய ரத்தம் ஒட்டிக்கொண்டது என்று வேறு சிலர் கூறுகிறார்கள். எனினும், சிகப்பு நிறமானது உங்கள் பாதம் ஸாஷ்டாங்கமாக வணங்கும் பக்தர்களின் மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பின் வெளிப்பாடாக நான் கருதுகிறேன்.''

தேவியின் பாதங்களின் அடர் சிவப்பு நிறத்திற்கான சாதாரண விளக்கங்களை பட்டத்ரி கவிஞர் பாணியில் நிராகரிக்கிறார். சந்திரகாந்தக் கல் சந்திரனின் கதிர்களுடன் தொடர்பு கொண்டு உருகத் தொடங்குவது போல, தேவியின் பாதங்கள் அவருடைய பக்தர்களுடன் தொடர்பு கொள்ளும்போது பாசத்தால் நிரம்பி வழிகின்றன என்று அவர் வலியுறுத்துகிறார்.

ஆதி சங்கரர் ஸௌந்தர்யலஹரியில் கூறுகிறார்:

**பயாத் த்ராதும் தாதும் பலமபி ச வாஞ்சாஸமதிகம்**
**சரண்யே லோகானாம் தவ ஹி சரணாவேவ நிபுணௌ (4)**

உலகங்களின் புகலிடமே! தங்கள் பாதங்கள் மட்டுமே தங்கள் பக்தர்களை அச்சத்திலிருந்து காப்பதிலும், விரும்பியதை விட அதிகமான பலனை அவர்களுக்குத் தருவதிலும் வல்லுநர்.

**ப்ராஹுः: பத்$^{3}$மஸமாஸ்ரயம் ஸதத்$^{4}$ரு'திம் த்வத்பாத$^{3}$பத்$^{3}$மாஸ்ரயா-**
**த$^{3}$ந்தஸ்த்வத்பத$^{3}$ பத்$^{3}$மவீக்ஷணவஸாத் க்ரு'ஷ்ணோऽபி பத்$^{3}$மேக்ஷண: ।**
**யத்பத்$^{3}$மார்சநமாமநந்தி ஸுதி$^{4}$யோ தா$^{3}$ரித்யூர்ய வித்$^{3}$ராவணம்**
**முக்திக்ஷேத்ரக$^{3}$தே ப$^{4}$வாநி தத$^{3}$பி த்வத்பாத$^{3}$பத்$^{3}$மார்சநம் ॥**

7. ''முக்திக்ஷேத்திரத்தில் வசிக்கும் பவானியே (பவனின் அதாவது சிவனின் தேவி)! ஞானிகள் பிரம்மாவை 'பத்மாஸ்ரயர்' என்று அழைக்கிறார்கள், அவர் உங்கள் தாமரை பாதங்களின் பக்தர், அதாவது தாமரையில் தஞ்சம் புகுந்ததால் (தாமரையின் மீது அமர்ந்திருப்பதால் அல்ல). கிருஷ்ணர் 'பத்மேக்ஷணர்' என்று அழைக்கப்படுகிறார், அதாவது தாமரைக் கண்கள் கொண்டவர், அவர் தொடர்ந்து உங்கள் தாமரைப் பாதங்களைத் தனது உள் கண்களால் பார்ப்பதால் (அவரது கண்கள் தாமரை இதழ்களைப் போல இருப்பதால் அல்ல). அதேபோல் வறுமையை விரட்டும் தேவியை வழிபடுவது 'பத்மார்ச்சனம்' பத்மாவை துதிப்பது, அதாவது உங்கள் தாமரை பாதங்களை வணங்குவது (பத்மாவை அதாவது லக்ஷ்மி தேவியை வணங்குவதை அல்ல) என்று ஞானிகளால் கருதப்படுகிறது.

பிரம்மா, விஷ்ணு, லக்ஷ்மி மற்றும் அனைத்து தேவதைகளும், மக்களை அனுக்ரகிக்கும் சக்தியைக் கொண்டவர்கள், தேவியின் பாதங்களை வணங்குவதன் மூலமே அவர்கள் இந்த சக்தியைப் பெறுகிறார்கள். ஸ்ரீ நாராயண பட்டத்ரி மீண்டும் சொற்களின், பொதுவாகப் புரிந்து கொள்ளப்பட்ட அர்த்தங்களை கவித்துவமாக நிராகரித்து, சிறப்பு அர்த்தத்தை அளித்து, அவற்றை தேவியின் தாமரை பாதங்களின் பெரும் சக்திகளுடன் இணைக்கிறார்.

ஸௌந்தர்யலஹரியின் முதல் பாடலிலேயே ஆதி சங்கரர் கூறுகிறார்:

**''ஸிவ: ஸக்த்யா யுக்தோ யதி பவதி ஸக்த: ப்ரபவிதும்**
**ந சே தேவம் தேவோ ந கலு குஸல: ஸ்பந்திதுமபி ।**
**அதஸ்த்வா-மாராத்யாம் ஹரி-ஹர-விரிஞ்சாதிபிரபி**
**ப்ரணந்தும் ஸ்தோதும் வா கத-மக்ருதபுண்ய: ப்ரபவதி '' ॥ 1 ॥**

'சிவன் சக்தியுடன் (தேவியுடன்) இணைந்திருப்பதால்தான், பிரபஞ்சத்தை உருவாக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறார். சக்தி இல்லாமல், அவருக்கு அசையக்கூட திறன் இல்லை. ஆகவே, பெரும் புண்ணியங்களைச் சேர்த்தவர்கள் மட்டுமே பிரம்மா, விஷ்ணு மற்றும்

சிவன் ஆகியோரால் போற்றப்படும் தெய்வீக அன்னையைப் போற்றும் பாக்கியம் பெற்றவர்கள்.‘

இங்கே கவனிக்க வேண்டிய மற்றொரு முக்கிய விஷயம்: மூன்று தேவர்களின் மூலம், தேவியை அடையும் முக்கியமாகப் போற்றப்பட்ட மூன்று பாதைகள் - ‘அடைக்கலம்’ (பக்தி), மனதில் தரிசனம் (ஞானம்), அர்ச்சனை (கர்மா) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார் கவி. இந்தப் பாதைகள் அனைத்தும் ஸ்ரீபாதங்களின் அருளைப் பெற வழிவகுக்கும்.

**பாத$^{3}$ம் தே ஸரஸீருஹத்$^{3}$ருஹமிமம் யத்ஸேவதே பத்$^{3}$மபூ$^{4}$ர் –**
**நூநம் தத்ஸ்வநிவாஸபங்கஜவரஸ்ரீலங்க$^{4}$நாஸங்கயா ।**
**கோ$^{3}$விந்தோ$^{3}$பி ச வாரிராஸிது$^{4}$ஹிதுர் வாஸாப்$^{3}$ஜபா$^{4}$தா$^{4}$பி$^{4}$யா**
**ஸ்வஸ்யைவாக்$^{4}$ரகரோத்$^{3}$க்$^{3}$ரு’ஹீத கமலத்ராணாபி$^{4}$லாஷேணவா ॥**

8. ‘தேவி! தாமரையிலிருந்து பிறந்த பிரம்மா, தாமரை மலருக்கு விரோதமான (அதாவது அதை விஞ்சுகிற) உங்கள் பாதங்களை வணங்குகிறார். அவருடைய தாமரை இருக்கையின் சிறப்பே குன்றிவிடும் என்ற அச்சம் காரணமாகவா? ஸமுத்திரத்தின் புத்ரியான லக்ஷ்மியின் தாமரை ஆசனம் பொலிவை இழந்து விடுமோ என்ற பயத்தினால் கோவிந்தர் உங்கள் ஸ்ரீபாதத்தை வணங்குகிறாரா? அல்லது அவர் வலது கையில் வைத்திருக்கும் தாமரை மலரின் அழகைக் காப்பதற்காகவா? ‘

தேவியின் ஸ்ரீபாதங்கள் மேலே குறிப்பிடப்பட்ட மூன்று புகழ்பெற்ற தாமரைகளின் மகிமையைக் குறைப்படுத்த வல்லவை என்றாலும், பக்தனின் மீதுள்ள கருணையால், அவ்வாறு செய்வதைத் தவிர்ப்பது மட்டுமல்ல; அதிக பிரகாசத்துடன் விளங்க அவர்களை ஆசீர்வதிக்கின்றனர்.

மேலும், தங்கள் உடைமைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது உலகக் கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்காக மட்டுமே தன்னை அணுகுபவர்களையும் தேவி ஆசீர்வதிக்கிறாள் என்பது தெளிவாகிறது. பகவான் கிருஷ்ணர் கீதையில் அத்தகையவர்களை ஆர்த்தர்கள் (துன்பப்படுபவர்கள்) என்று அழைக்கிறார் மற்றும் ஜிக்ஞாசு (அறிவின் தாகம் கொண்டவர்), அர்த்தார்த்தி (உடைமைக்காக விரும்புபவர்) மற்றும் ஞானி (ஞானம் உள்ளவர்) உள்ளிட்ட பிற பக்தர்களுடன் அவர்களைப் பாராட்டுகிறார். (7:16)

**''சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜு ।**
**ஆர்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப'' ॥ 7.16 ॥**

**ஸேவந்தே குலஸம்பதே$^{3}$ நக$^{3}$மயா: ஸீதாம்ஸவஸ்த்வத்பத$^{3}$ம் ।**
**தத்பாகோ நநு வீக்ஷ்யதே ஹி நிதராமந்யேஷு ஸீதாம்ஸுஷு ॥**

**ஏகோ பாயூலக ஏவ மௌலிமயி தே யாதோ லலாடாத்மதா-**
**மந்யோ நிர்மலகண்டமண்ட$^{3}$லத$^{3}$ஸா-மந்யௌ து த$^{4}$ந்யௌ க$^{3}$தௌ ॥**

9. அம்மா! உங்கள் ஸ்ரீபாதரின் விரல் நகங்கள் உண்மையில் சந்திரர்களே. அவர்கள் உங்கள் பாதங்களை பஜித்ததினால் தன் குல வ்ருத்தியை அடைந்தார்கள். அத்தகைய வழிபாட்டின் பலன் மற்ற நிலவுகளில் தெளிவாகக் காணப்படுகிறது; ஒரு பாலசந்த்ரன் உங்கள் தலையை அலங்கரிக்கிறது; மற்றொரு சந்திரன் உன் நெற்றிக்கண் ஆனது. மற்ற இரண்டு அதிர்ஷ்டமான நிலவுகள் எப்போதும் உங்களது தூய கன்னப்பிரதேசங்களாக மாறியது.

தேவி, வழிபடுபவர் மீது உள்ள பெருங்கருணையால், அவரது முன்னோர்கள் மற்றும் சந்ததியினரின் முழு குடும்பத்தையும் அனுக்ரகிக்கிறார். சந்திரன் சிறு குழந்தையாக இருந்தாலும், அவள் தலையில் ஆபரணமாக அணிந்தாள். அவளுடைய கருணை அப்படி.

ஸௌந்தர்யலஹரி கூறுவது:

**''லலாடம் லாவண்யா த்யுதி விமல-மாபாபதி தவ யத்**
**த்விதீயம் தன்மன்யே மகுடகடிதம் சந்த்ரஸகலம்'' । (46)**

'உங்கள் பிரகாசிக்கும், எப்போதும் தூய்மையான, அழகான நெற்றி — சந்திரன் உங்கள் தலையை கிரீடம் போல அலங்கரிக்கும் பிறைக்கு நிறைவை உண்டாக்குவது போல் தோன்றுகிறது.'

மேலும் லலிதாஸஹஸ்ரநாமம் கூறுகிறது:

**''அஷ்டமீ-சந்திர விப்ராஜ தலிகஸ்தல சோபிதா'' । (5)**

உங்கள் நெற்றி 8 ஆம் நாள் சந்திரனைப் போல பிரகாசிக்கிறது.

(தொடரும்)

# வேத ஸூக்தங்கள்

## ஜைமினி – சிவ ஸங்கல்ப ஸூக்தம்

இந்த ஸூக்தம் சுக்ல யஜுர் வேதத்தில் கோஷிக்கப்படுகிறது. நமது மனம் நல்லதை நாட வேண்டும் என்பது தாத்பர்யம். பொதுவாக மனம் ஒரு மீடியமாக நமக்கு இருக்கிறது. இந்த்ரியங்கள் வழியாக செய்தி மனதுக்கு வந்து புத்திக்குப் போகிறது. இதுதான் நாம் பொருளை அறியும் தன்மை. நம்மை படுகுழியில் தள்ளுவதும் மனம்தான். சிகரத்தில் வைப்பதும் மனம்தான். எவ்வளவு எண்ணங்கள், பழைய நினைவுகள் குரங்கு போல் தாவும். அமெரிக்காவிற்குப் போகும் மனம் திடீரென்று மைலாப்பூருக்கு வரும். இச்சை, த்வேஷம், காமம், க்ரோதம் இத்தனையும் இந்த மனத்தால்தான்.

'ஆயிரம் வாசல் இதயம் அதில் ஆயிரம் எண்ண்ணங்கள் உதயம்' என்னும் பாட்டு நினைவுக்கு வருகிறது. நல்ல எண்ணங்களைத் தவிர கெட்ட எண்ணங்கள்தான் அதிகம். மனதைப்பற்றி பாரதி கூறுவார்.

**மனம் என்னும் பெண்ணே வாழி நீ கேளாய்**
**ஒன்றையே பற்றி ஊசலாடுவாய் அடுத்ததை நோக்கியடுத்துலாவுவாய்**
**நன்றையே கொள்ளெனிற் சோர்ந்து கை நழுவுவாய் விட்டு விடென்றதை**
**விடாதுபோய் விழுவாய். இப்படி நீண்டு போகும் கவிதை.**
**இறுதியில் சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி**
**உன்றனக்கின்பம் ஓங்கிடச்செய்வேன் என்று முடிப்பார்.**

**யத் ஜாக்ரதுபைதி**

வேதமும் மனத்தின் தன்மைகளைக் கூறி அந்த மனம் சிவ சங்கல்பத்தில் இருக்கட்டும் என்று வேண்டும் ஸூக்தத்தைப் பார்ப்போம்.

1. விழிப்பில் எந்த திவ்யமான பொருள் தூரமாய் செல்லுகிறதோ உறக்கத்தில் அது திரும்புகின்றதோ அந்த ஏக ஜோதியான மனம் சிவ ஸங்கல்பமாகட்டும்.

2. எந்த மனத்தால் தர்மம் மிகும் தீரர்கள் வேள்வி, போர்களில் செயல்களைச் செய்கிறார்களோ எது ப்ரஜைகளில் ஒன்றியுள்ளதோ அந்த என் மனம் சிவ ஸங்கல்பமாகட்டும்.

3. எது மக்களிடத்தில் ப்ரக்யானம் என்ற நிலையாகி அமிழ்தமாகியுள்ளதோ எது இல்லாமல் மனிதன் ஒரு செயலையும் செய்ய முடியாதோ அந்த என் மனம் சிவ சங்கல்பமாகட்டும்.

4. எந்த அமிழ்தத்தால் இறந்ததும் வரப்போவதும் அறியப்பட்டு எதனால் ஏழு ஹோத்ருக்களால் வேள்வி விரிகின்றதோ அந்த என் மனம் சிவ ஸங்கல்பமாகட்டும்.

5. எதில் ரதசக்ரங்களிடையே ஆரங்கள் போல் ருக், யஜுஸ், சாமன் வேதங்கள் ஸ்தாபனம் ஆகியுள்ளதோ மக்களின் சித்தம் எதில் இழைக்கப்பட்டுள்ளதோ அந்த என் மனம் சிவ ஸங்கல்பமாகட்டும்.

6. நல்ல வழிகாட்டும் கடிவாளங்களால் துரித குதிரைகளை நடத்துவது போல் மனிதர்களை எது நடத்திச் சென்று இதயத்தில் வசிக்கின்றதோ திடமாயும் அதி துரித மாயும் உள்ளதோ அந்த என் மனம் சிவ ஸங்கல்ப்பமாகட்டும்.

### திரளான பொருள்

மனம் மிகவும் சக்தி வாய்ந்தது. ஆழம் காண முடியாதது. அதனுடைய போக்கில் விட்டால் அனர்த்தமே மிஞ்சும். நம்மால் அதை அடக்க முடியாது அப்யாஸத்தால் தான் வழிக்குக் கொண்டு வர முடியும். அந்த மனம் நல்லதையே எண்ண இந்த ‘சிவ ஸங்கல்பப் ப்ரார்த்தனை.

(தொடரும்)

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித்து ஆயினும் இல்**

இல்வாழ்க்கைக்குத் தக்க நற்பண்பு மனைவியிடம் இல்லை எனில், ஒருவனுடைய வாழ்க்கை வேறு எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் பயன் இல்லை.

(குறள் : 52)

கள்ளுண்ணல், தீயோர் உறவு, கணவனை விட்டுத் தனிவழி செல்லல். அங்குமிங்கும் சும்மா போதல், கண்ட இடத்தில் தூங்குதல், முன்பின் அறியாதவர் இடத்தில் அமருதல் ஆகிய இந்த ஆறும் பெண்களுக்குப் பழி தருவன.

(மநுநீதி 9 - 13)

**ப்ரதீபப் பேழை**

# ஆபஸ்தம்ப ஸூத்ரம்

ரூக். யஜுஸ், ஸாம, அதர்வா என்னும் நான்கு வேதங்கள் ! ருக்வேதத்தில் 21-ம், யஜுர் வேதத்தில் 101-ம், ஸாம வேதத்தில் 1000-ம் அதர்வ வேதத்தில் 11-ம் ஆக ஒவ்வொன்றிலும் பல சாகைகள். எல்லாச் சாகைகளிலும் கர்ம பாகம், உபநிஷத் பாகம் என்று இரு பிரிவுகள். தற்காலம் ருக்வேதத்தில் ஐதரேய சாகை ஒன்றும் சுக்ல யஜுர் வேதம், க்ருஷ்ண யஜூர்வேதம் என்ற இருவகை யஜுர் வேதங்களிலே சுக்ல யஜுர் வேதத்தில் மாத்யந்தின சாகை, காண்வ சாகை என்ற இரு சாகைகளும், கிருஷ்ண யஜூர் வேதத்திலே தைத்திரீய சாகையும், ஸாம வேதத்தில் கௌதும சாகை, தலவகார சாகையென்று இரு சாகைகளும், அதர்வ வேதத்தில் ஒரு சாகையும் தான் விளங்குகின்றன. ஒவ்வொரு தவிஜனும் அந்தந்த வேதத்திலுள்ள பல சாகைகளுக்குள் நீண்டகாலமாகத் தன் குலத்தில் எந்தச் சாகை அத்யயனத்தில் இருந்து வருகிறதோ, அந்தச் சாகையை உபநயனத்திற்குப் பின் நியமங்களுடன் ஸதாசார்யர்களிடம் அத்யயனம் செய்ய வேண்டும். அவைகளின் கருத்தையும் குருமூலம் அறிந்து, தர்ம நூல்களில் சொல்லியபடி தனக்கு உசிதமான, நல்ல குலத்தில் பிறந்து நல்ல குணம் வாய்ந்த கன்னிகையை மணந்து, கிருஹ்த ஆச்ரமத்தில் இருந்து எல்லாத் தர்மங்களையும் அனுஷ்டிக்க வேண்டும். ச்ரேயஸ்களையும் அடைய வேண்டும்.

தர்மங்களை அனுஷ்டித்து ஈச்வரானுக்ரஹத்தால் அணிமாதி ஸகல ஸித்திகளை அடைந்தார்கள் நம் முன்னோர்கள். தங்களது யோக சக்தியால் எல்லா வேதங்களையும் ப்ரத்யக்ஷமாய் அறிந்தவர்கள். ஸர்வஞர்களும், கருணையுள்ளவர்களும் நம் முன்னோர்களுமான பல மஹரிஷிகள், கணாதர், கௌதமர் போன்ற சாஸ்த்ரகாரர்கள் அந்தந்தச் சாஸ்திரங்களை ஸூத்ரங்களாகக் இயற்றினார்கள். ச்ரௌத ஸூத்ரம், க்ருஹ்ய ஸூத்ரம், தர்ம ஸூத்ரம் என்னும் ஸூத்ரங்கள் எல்லா வர்ணத்தார்களும் ஆசாமிகளும் அனுஷ்டிக்க வேண்டியவை தர்ம தத்வங்களின் அவ்வித தர்மங்களை அனுஷ்டித்து முறைகளையும் நடு நடுவே மனச்சுத்தி பெற்று ஸத்குருவின் உபதேசத்தாலறிய வேண்டிய வேதாஹஸ்யமான ஆத்ம தத்வத்தையும் உபதேசித்து அருள்கின்றன.

ருக்வேத ஐதரேயசாகிகளுக்கு ஆச்வலாயனர், சுக்ல யஜுர் வேத மாத்யந்தினசாகிகள், காணவசாகிகள் இருவருக்கும் காத்யாயனர் கிருஷ்ண யஜுர்வேத தைத்ரீய

சாகிகளுக்குப் போதாயனர், ஆபஸ்தம்பர், பரத்வாஜர், ஸத்யாஷாடர், விகனஸ், ஆக்நிவேச்யர் என்னும் ஆறு ரிஷிகள், ஸாமவேத கௌதும சாகிகளுக் த்ராஹ்யாயனர், ஸாமவேதி தலவகார் சாகிகளுக்கு ஜைமினி இவர்கள், ச்ரௌத ஸூத்ரம் க்ருஹ்ய ஸூத்ரம் முதலான ஸூத்ரங்களால் அந்தந்தச் சாகிகளுடைய நிஷேகம் முதல் கடைசியில் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரம் வரையிலுள்ள எல்லாவித தர்மங்களையும் முறையே உபதேசித்திருக்கிறார்கள்

தர்ச பூர்ணமாஸம், ஜ்யோதிஷ்டோமம், முதலான ச்ரௌத கர்மாக்கள், ஹோதர அத்வர்யு, உத்காதா என்னும் மூன்று வேதிகளால் முதலான அனுஷ்டிக்கக் கூடியவைகளாயிருப்பதால் ஸூத்ரகாரர்களில் ஒருவரான பகவான் ஆபஸ்தம்ப மஹரிஷி க்ருஷ்ண யஜூர் வேத தைத்ரீய சாகிகளான அத்வர்யுக்கள் செய்ய வேண்டிய எல்லாவித ச்ரௌத கர்மாக்களையும், போதிக்கும் ச்ரௌத ஸூத்ரங்களையும், உபநயன விவாஹம் பாக யக்ஞங்கள் முதலான ஸ்மார்த்த கர்மாக்களைப் போதிக்கும் க்ருஹ்ய ஸூத்ரங்களையும், நான்கு வர்ணத்தாரும் அனுலோம ப்ரதிலோம ஜாதியர்களான யாவரும் அனுஷ்டிக்க வேண்டிய பொது தர்மங்களை போதிக்கும் தர்ம ஸூத்ரங்களையும், கல்ப சூத்திரங்களையும் இயற்றி பேருபகாரம் செய்துள்ளார். அவர்கள் 'ஆத்ம தத்வஞானம் மிக சிறந்தது ; அதுதான் எல்லாராலும் சம்பாதிக்கத் தகுந்தது' என தம் நூல்களில் பரமமான தம் பாவத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆனாலும் அவ்வுயர்ந்த ஞானம், வேதங்கள் உபதேசிக்கும் தர்மங்களை நன்கு அனுஷ்டித்து, சித்த சுத்தி ஈச்வர ப்ரஸாதம் சித்தைகாக்ரியம் முதலிய சாதனகளைப் பெறாமல் அடைய முடியாது. பலத்தை விரும்புகிறவன் சாதனத்தில் நன்கு பிரயாசை செய்து விட்டால் பலம் சுலபமாக ஏற்படும். வேதங்களெல்லாம் யாவரும் ச்ரௌத கஸ்மார்த்தாதி தர்மங்களை அனுஷ்டிக்க உபதேசிக்கின்றன. மேன்மை வாய்ந்த கர்மாக்கள் விலகி நிலை வேதங்களின் அபிப்ராயத்தில் இல்லை. நிஷேகம், பும்ஸவனம் ஸீமந்தோந்நயனம், ஜாதகர்ம, நாமகரணம், அன்ன ப்ராசனம், சௌளம், உபநயனம், 4 வேத வரதங்கள், ஸமாவர்த்தனம், விவாஹம், 5 மஹா யக்ஞங்கள், 7 பாக யக்ஞங்கள், 7 ஹவிர் யக்ஞங்கள், 7 ஸோம யாகங்கள் ஆக 40 ஸம்ஸ்காரங்களை த்விஜர்கள் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டும் வேதங்களின் கருத்தை விளக்கி அவைகளை அனுஷ்டிக்கும் முறையை அடிமுதல். முடிவு வரையில் உபதேசித்திருக்கிறார்கள். அவைகளில் ச்ரௌத ஸூத்ரங்களால் 7 ஹவிர் யக்ஞங்களையும், 7 ஸோம யாகங்களையும் க்ருஹ்ய ஸூத்ரங்களால் மற்ற எல்லா ஸம்ஸ்காரங்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

யாவரும் விஹிதங்களில் சற்றுக் குறைவாக நடந்த போதிலும் நிஷித்தங்களில் கொஞ்சமேனும் தவறாமல் (ஒன்றையும் செய்யாமலே) இருக்க மிக வற்புறுத்தி உபதேசிக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு சாகிகளும், தங்கள் ஸூத்ரகாரர்கள் உபதேசம் செய்தபடி நாற்பது ஸம்ஸ்காரங்களையும் அனுஷ்டிக்க வேண்டும். தைத்திரீய சாகிகளான ஆப்ஸ்தம்ப மஹரிஷியின் வழியைப் பின்பற்றி, கர்ப்பா தானம் முதலிய ஸகல ஸம்ஸ்காரங்களையும் அந்தந்தக் காலங்களிலும், செய்யத் தவறினால் அதற்கு விதிக்கப்பட்ட ப்ராயச்சித்தங்களுடன் கௌண முக்ய காலங்களிலாவது செய்து க்ஷேமமடைய வேண்டுமென்பதே மஹரிஷியின் உபதேச ஸாரம்.

இந்த 40 ஸம்ஸ்காரங்களை அனுஷ்டித்து, அத்துடன், தயா, க்ஷமா அநஸூயா, சௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம். அஸ்ப்ருஹா என்னும் ஆத்ம குணங்களான 8 ஸம்ஸ்காரங்களையும் கடைப்பிடித்து ஈச்வர ப்ரஸாதத்தால் நித்யானந்தமான மோக்ஷத்தை அடைகிறார்கள் என்ற வேத ரகஸ்யத்தையும் இம் மகரிஷி உபதேசித்துள்ளார். மேலும், இம் மஹான் கீழே சொல்லிய சூத்திர ஜாலங்களைத் தம் அனுபவத்திலுள்ள வேதங்களின் மறு ரூபமே என்பதைக் காட்டுவதற்காகவே வேதங்களிற்போல, பிரச்னங்கள் என்னும் பிரிவை அமைத்திருக்கிறார்கள்.

பிரத்யக்ஷமாக அத்யயனத்தில் பிரகாசித்து வரும் வேதங்கள் போதிக்கும் தர்மங்களை முதலில் 25 பிரச்னங்களில் போதிக்கிறார். அத்யயனத்தில் இல்லாததும் முன்னோர்களின் ஸதாசாரத்தால் ஊகிக்கக்கூடியதுமான தர்மங்களை க்ருஹ்ய ஸூத்திரங்கள் என்ற பிரச்னத்தாலும் தர்மத் திரங்கள் என்ற 2 பிரச்னங்களாலும் தெரியப்படுத்திருக்கிறார். கடைசியில் கல்ப ஸூத்திரங்கள் என்ற ப்ரச்னத்தால் யாகங்களில் உள்ள வேதி முதலியவைகளின் அளவு முதலான எல்லாப் பிரகாரங்களையும் வெளியிட்டுள்ளார்.

முன்னோர்களான மனு, யாக்ஞவல்கியர் முதலான ரிஷி ச்ரேஷ்டர்களுக்கு வேதங்களே பிரமாணங்கள். நம் போன்றவர்களுக்கு வேத அனுபவம் பெற்ற தர்மக்ஞர்களான அவர்களின் ஆசாரம் சிறந்த பிரமாணம். எல்லா க்ஷேமங்களுக்கும் அடிப்படையாக வேதங்களிலும், தர்மங்களிலும் பெரியோர்களின் உபதேசத்திலும் பெரு நம்பிக்கை வேண்டுமென்கிறதைப் புகட்டுகிறார். **யமார்யா, க்ரியமாணம் ப்ரஸம்ஸந்தி ஸதர்ம:! யம் கர்ஹந்தே ஸோ஽தர்ம:** என்று தர்மக்ஞர்கள் புகழப்படுவது தர்மமென்றும் அவர்களால் வெறுக்கப்படுவது அதர்மமென்றும் கூறுகிறார்.

**சோதனாலக்ஷணார்த்தோ தர்ம:** என்று நியாயத்திற்கு மேற்பட்டும் சொல்லுவது போல யாவருக்கும் பெரியோர்களின் உபதேசத்தில் மிகப் பற்றுதலை வேண்டிக் கொள்ளுகின்றார். தாம் ஸகல தர்மங்களையும் சொல்லித் திருப்தி அடையாதவராய்,

தம் தர்ம ஸூத்திர நூலின் கடைசியில் **ஸத்ரீப்ய: ஸர்வ வர்ணேப்யஸ்ச தர்மஸேஷான் ப்ரதீயாத்** என்று பின்னும் என்னால் சொல்லப்படாத தர்மங்கள் பல உள்ளன; அவைகளை ஸ்திரீகளிடமிருந்தும், எல்லா ஜாதிகளிடமிருந்தும் அறிந்து கொள்ள வேண்டுமென்று தர்ம பூமியாகிய பாரத நாட்டில் பிறந்த யாவருக்கும் இயற்கையிலுள்ள தர்மங்களின் அறிவை வெளிப்படுத்தி நம் நாட்டின் பெருமையையும் பாராட்டியுள்ளார். ஸ்ரீ பகவான் கீதையில் உபதேசித்திருப்பது போலவே, ஸ்ரீ மஹரிஷியும் அடியிற்சொன்ன ஸகல தர்மங்களையும் கொஞ்சமேனும் பலத்தில் விருப்பமில்லாமல் செய்வதே மேலானது என்கிறார். உயர்ந்த பலத்திற்காக வெகு சிரமத்துடன் வளர்க்கப்பட்ட மாமரம் போன்ற மரங்களிலிருந்து நிழல் முதலான அல்ப பலனும் கிடைப்பதுபோல் முமுக்ஷுக்களாக மட்டிலும் இருந்து அல்ப பலன்களை விரும்பாமல் தர்மங்களைச் செய்வதிலிருந்து அல்ப பலன்கள் முதல் உயர்ந்த ச்ரேயஸ் வரையிலுள்ள எல்லாப் பலன்களும் கிடைக்கும் என்றும் மற்றப் பலன்களை விரும்பி விட்டால், அத்துடன் நின்று விடுமென்றும் குணதோஷங்களை விளக்கிப் போதித்துள்ளார். ஆகவே யாவர்களும் ஸ்ரீ பரமாசாரியர்களின் அனுக்ரஹத்தால் நிஷ்காமர்களாய், கீழே சொல்லிய எல்லாத் தர்மங்களையும் அனுஷ்டித்து, உயர்ந்த ச்ரேயஸ் வரையிலிருக்கும் எல்லா க்ஷேமங்களையும் அடையவேண்டுமாறு ஈச்வரன் கருணை புரிவாராக.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**

சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**"ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal in Mahakumba Mela at Prayagraj













## Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal in Mahakumba Mela at Prayagraj















# Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal performing Visesha Pujas at Adi Shankara Vimana Mandapam - Prayagraj













# Jayanti Mahotsavam of Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal at Tiruvanaikovil

















# Jayanti Mahotsavam of Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal at Tiruvanaikovil















## Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal visits Neelayathakshi Ambal Sametha Sri Kayarohaneshwarar Temple - Nagapattinam















## Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal graces Mandalabhishekam at Sri Dharma Samvardhini Samedha Sri Aiyarappar Temple - Thiruvaiyaru










# Pujyasri Sri Shankara Vijayendra Saraswathi Swamigal graces Mandalabhishekam at Sri Dharma Samvardhini Samedha Sri Aiyarappar Temple - Thiruvaiyaru













# பங்குனி மாத ஸ்ரீ மடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *18-03-2025* | செவ்வாய் | ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள் ஆஸ்ரம ஸ்வீகார தினம் — ஸ்வாதி வேத பாராயணம் |
| *20-03-2025* | வியாழன் | அனுஷம் தேர் — அனுஷம் வேத பாராயணம் |
| *22-03-2025* | சனி | மூலம் தேர் — மூலம் வேத பாராயணம் |
| *24-03-2025* | திங்கள் | உத்ராடம் தேர் — உத்ராடம் வேத பாராயணம் |
| *25-03-2025* | செவ்வாய் | ஏகாதசி |
| *26-03-2025* | புதன் | த்வாதசி — அவிட்டம் தேர் — அவிட்டம் வேத பாராயணம் |
| *27-03-2025* | வியாழன் | ப்ரதோஷ பூஜை |
| *30-03-2025* | ஞாயிறு | வஸந்த நவராத்ரி ஆரம்பம் — யுகாதி |
| *06-04-2025* | ஞாயிறு | ஸ்ரீ ராம நவமி |
| *08-04-2025* | செவ்வாய் | ஏகாதசி |
| *09-04-2025* | புதன் | த்வாதசி |
| *10-04-2025* | வியாழன் | ப்ரதோஷ பூஜை |
| *11-04-2025* | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| *12-04-2025* | சனி | பௌர்ணமி பூஜை |

*21-03-2025 ; 28-03-2025 04-04-2025 ; 11-04-2025*

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# அநுகீதாபர்வம்

## (பத்தொன்பதாவது அத்தியாயம்)

(ஸித்தர், ஜீவன் கர்ப்பத்தை அடைவது முதலியவற்றைத்
காஸ்யபருக்குச் சொல்லியது.)

இவ்வுலகில் புண்ய கர்மங்களும் பாப கர்மங்களும் நாசமடைகிறதில்லை. அவைகள் ஒவ்வொரு சரீரத்தையும் அடைந்து அதற்குத் தக்கபடி பயனைத் தருகின்றன. நன்கு காய்த்த பலவிருக்ஷமானது மிகுதியான கனிகளைத் தருவது போலச் சுத்தமான மனத்துடன் செய்யப்பட்ட புண்ணியமானது மிகுதியான பயனைத் தரும். அவ்வாறே கெட்ட மனத்துடன் செய்யப்பட்ட பாவமும் மிகுதியான பயனைக் கொடுக்கும். இவ்வுலகில் ஆத்மாவானவன் மனத்தை முன்னிட்டுக் கர்மாவில் பிரவ்ருத்திக்கிறானன்றோ? கர்மங்களாலும் காமக் குரோதங்களாலும் சூழப்பட்ட மனிதன் கர்ப்பத்தில் பிரவேசிக்கும் விதத்தைப் பற்றிய மறுமொழியையும் கேள். சுக்ரமானது ஸ்திரீயின் கர்ப்பப்பையை அடைந்து சோணிதத்துடன் சேர்கிறது. ஜீவன் கர்மங்களால் உண்டானதும், சுபமாகவோ அசுபமாகவோ இருப்பதுமான (அந்தச் சுக்ரத்தாலாகிய) சரீரத்தை அடைகிறான். பிரம்ம ஞானியானவன் ஸூக்ஷ்மமாகவும் அவ்யக்தமாகவும் இருப்பதால் சரீரத்தை அடைந்து ஒன்றிலும் பற்றுதலடைகிறதில்லை.

ஆகையால், சாஸ்வதமான அந்தப் பிரம்மத்தை அடைகிறான். அந்தப் பிரம்மமானது எல்லாப் பூதங்களுக்கும் உத்பத்தி காரணம். அதனால், பிராணிகள் ஜீவிக்கின்றன. அந்த ஜீவன் வரிசையாக எல்லாப் பிராணிகளின் கர்ப்பத்திலும் பிரவேசித்து இந்திரிய ஸ்தானங்களில் இருந்த ஞானத்தை அடைகிறான். அறிவுடன் கூடின கர்ப்பத்திலிருக்கும் அந்த ஜீவன், பிறகு அவயவங்களை அசையும்படி செய்கிறான். (தாம்ர முதலியவைகளால் பிரதிமை செய்யும் போது அந்தத் தாம்ர முதலியவை) சிறிது தங்க முதலியவற்றைச் சேர்த்து விட்டால் அவை அந்தப் பிரதிமையின் சரீரம் (முழுவதும்) பரவுவதுபோல (ஸூக்ஷ்மனான) ஜீவன் கர்ப்பத்தில் முழுதும் வியாபிக்கிறானென்று தெரிந்து கொள். நெருப்பானது இரும்பு உருண்டையிற் பிரவேசித்துத் தபிக்கச் செய்வது போலக் கர்ப்பத்தில் ஜீவன் பிரவேசித்திருப்பதைத் (தெரிவிப்பதென்று) நீயும் தெரிந்து கொள்.

ஜ்வலிக்கின்ற தீயானது வீட்டைப் பிரகாசிக்கச் செய்வது போல ஜீவன் சரீரங்களைப் பிரகாசிக்கும்படி செய்கிறான். முன் ஜன்மத்தில் சுபமோ, அசுபமோ எந்த எந்தக் கர்மாவைச் செய்கிறானோ அவற்றையெல்லாம் அவணியமாக அனுபவிக்கிறான்.

(அந்தக் கர்மமானது) அனுபவத்தால் நசிக்கிறது. மறுபடியும் வேறு கர்மம் செய்யப்படுகிறது. எதுவரையில் மோக்ஷமடைவதற்குரிய தர்மத்தைத் தெரிந்து கொள்ளவில்லையோ அதுவரையில் (இவ்விதம் செய்கிறான்.) ஸாதுக்களுள் சிறந்தவனே ! பலவகைப் பிறவிகளில் சுழன்று கொண்டிருப்பவன் எந்தத் தர்மத்தால் ஸுகம் பெறுவனோ அந்தத் தர்மத்தை உனக்குச் சொல்லுகிறேன்.

தானம், வ்ரதம், பிரம்மசர்யம், சாஸ்திரத்தில் சொல்லியபடி வ்ரதங்களைச் செய்வது, மனத்தை அடக்குவது, மிக்க சாந்தனாக இருப்பது, பிராணிகளிடம் கருணை புரிவது, இந்திரியங்களை அடக்குவது, குரூரனாக இல்லாமலிருப்பது, பிறருடைய பொருளைக் கவராமலிருப்பது, பூமியில் பிராணிகளுக்கு மனத்தாலும் அப்பிரியங்களைச் செய்யாமலிருப்பது, தாய் தந்தைகளுக்குப் பணிவிடை செய்வது, தேவதைகளையும் அதிதிகளையும் பூஜிப்பது. குருவைப் பூஜிப்பது, (தகாதவைகளில்) அருவருப்பு, சுத்தனாக இருப்பது, எப்பொழுதும் இந்திரியங்களை அடக்கியிருத்தல், சுபகார்யங்களைச் செய்வது ஆகிய இவைகள் ஸாதுக்களின் வ்ரதமாகச் சொல்லப்படுகின்றன.

இவைகளால் சாஸ்வதர்களான ஜீவர்களை ரக்ஷிக்கக்கூடிய தர்மமானது உண்டாகிறது. ஸாதுக்களால் செய்யப்பட்ட தர்மமானது ஸதாசாரமென்று உறுதி செய்யப்பட்டது. அது ஸ்வர்க்கம். மோக்ஷம் என்னும் இரண்டு பயன்களையும் தருவதாகும். இவ்விதம் ஸாதுக்களிடத்தில் எப்பொழுதும் பார்க்க வேண்டும். அவர்களிடத்தில் இந்த மர்யாதை நிலைத்திருக்கும். ஸாதுக்கள் அனுஷ்டிக்கும் ஆசாரமானது தர்மத்தைச் சொல்லுகிறது. ஸனாதன தர்மமான அந்தக் கர்மமானது அந்த ஸாதுக்களிடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை நன்கு அனுஷ்டிப்பவன் கெட்ட கதியை அடைய மாட்டான்.

ஆகையால், தர்ம மார்க்கங்களினின்று நழுவின ஜனங்கள் சிக்ஷிக்கப்படுகின்றனர். யோகியானவன் முக்தனே. அவன் இவர்களிலும் சிறந்தவன். எவ்விதத்திலும் தர்மத்துடனிருக்கும் மனிதன் வெகு காலம் சென்று ஸம்ஸாரத்தைத் தாண்டுவான். இவ்விதம் எல்லாப் பிராணிகளும் முன்செய்த வினையின் பயனை அடைகின்றன. அந்த வினையெல்லாம் (பிறவிக்குக்) காரணம். இந்த ஆத்மாவானவன், அதனால் அவமதிக்கப்பட்டு இந்தச் சரீரத்தை அடைந்தான்.

இந்த ஆத்மா ஆதியில் அடைந்த சரீரம் யாரால் அமைக்கப்பட்டது என்று ஸம்சயமடைகிறது. இனி, அதனையும் சொல்லுகிறேன். எல்லா உலகங்களுக்கும் பிதாமஹரான பிரம்மதேவர் தமக்குச் சரீரத்தைச் செய்து கொண்டு ஸ்தாவர ஜங்கம

ரூபமான மூவுலகங்களையும் முழுதும் படைத்தார். பிறகு, அவர் பிராணிகளுக்கு (தேயு, அப்பு, பிருதைப்) படைத்தார். திவி இம்மூன்றாலாகிய) பிரதானமென்னும் பிரகிருதியை (சரீரத்தைப்) படைத்தார். அதனால் இவ்வுலகமெல்லாம் வியாபிக்கப்பட்டிருக்கிறது. அதனை உலகத்தில் மேலானதாகக் கருதுகின்றனர். இந்தச் சரீரமானது க்ஷரமென்றும், சரீரத்தைக் காட்டிலும் வேறானதும் அழிவற்றதுமான ஜீவன் அக்ஷரமென்றும் சொல்லப்படுகின்றன. சரீரம், ஜீவன், பிரம்மம் இம்மூன்றனுள் சரீரமும் ஜீவனும் முற்றும் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறாக இருக்கின்றன. (ஸ்ருஷ்டிக்கு) முன் (சாஸ்திரத்தால்) காணப்பட்ட பிரம்மதேவர் (ஆகாய முதலான) எல்லாப் பூதங்களையும், ஸ்தாவரங்களையும், ஜங்கமங்களையும் படைத்தார் என்று பழமையான வேதம் கூறுகிறது. அந்தப் பிதாமஹரானவர் அந்தச் சரீரத்திற்குக் கால அளவையும் பிராணிகளுக்குப் பலபிறவிகளில் சுழல்வதையும் திரும்பி வருதலையும் அமைத்தார்.

முன் ஜன்மத்திய தன் நிலைமையை அறிந்த ஒரு மேதாவி போல நான் சொல்வன எல்லாம் உண்மையாக இருக்கும். எவன் ஸுகத்தையும், துக்கத்தையும் அநித்தியமாகவும் சரீரத்தை அசுத்த வஸ்துக்களால் அமைந்ததும் அழிவுள்ளதும் கர்மாவினால் ஏற்பட்டது மாகவும் நன்றாகப் பார்க்கிறானோ ஸுகமெல்லாம் துக்கமாகக் காணப்பட்டதென்று நினைக்கிறானோ அவன் கோரமானதும் எவ்விதத்திலும் தாண்டுவான். தாண்ட முடியாததுமான ஸம்ஸார ஸமுத்திரத்தைத் ஜனனம், மரணம் என்னும் ரோகங்களால் வியாபிக்கப்பட்டவனும் பிரதானத்தை அறிந்தவனுமானவன் சைதன்யமுள்ள பிராணிகளிடத்தில் சைதன்யத்தை ஸமமாகப் பார்க்கிறான்.

ஸாதுக்களில்சிறந்தவனே ! ஆகையால், எவன் ஒருவன் மேலான பதத்தைத் தேடிக் கொண்டு (விஷயங்களில்) வைராக்யத்தை அடைகிறானோ அவனுக்கு உபதேசிக்க வேண்டியதை உள்ளபடி சொல்லுவேன். பிராம்மண ! இனி, சாஸ்வதனும் அழிவற்றவனுமான ஆத்மாவைப் பற்றிய உத்தமமான ஞானத்தை நான் சொல்லுகிறேன். இதனை முழுதும் தெரிந்துகொள்.

(தொடரும்)

# சுக நாஸ உபதேசம்

ஸ்ரீமதி விசாலாக்ஷி சங்கரன்

சுமார் 7 ஆவது நூற்றாண்டில் பிறந்தவர் பாணபட்டர். மிகச்சிறந்த கவி **'பாணோச்சிஷ்டம் ஸர்வம்'** என்று கவிகளாலும் பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டவர். **'கௌட'** ரீதியில் எழுதப்பட்ட அவரது நூல்கள் ஜகத் ப்ரசித்தமானவை. வாக் சாதுர்யம், நீண்ட ஸமாஸங்கள், அத்புதமான கற்பனை வளம் என்று பல வகையான சிறப்புகளைக் கொண்டவை அவரது காவ்யங்கள். **'சண்ட சதகம்'** என்னும் க்ரந்தத்தில் சக்தியின் புகழைப் பாடுகிறார். **'ஹர்ஷ சரித்ரம்'** என்னும் நூலில் ஹர்ஷ அரசனின் சரித்ரத்தைக் கூறுகிறார். **'காதம்பரி'** என்னும் உரை நடைக் காவ்யத்தில் மூன்று தலை முறைக் காதலை மிக அழகாக விவரிக்கிறார். அந்த காதம்பரியில் தான் சுக நாசர் என்னும் ரிஷி சந்த்ராபீடன் என்னும் இளவரசனுக்கு வாழ்வியல் தத்வங்களை மிக அழகாக உபதேசிக்கிறார். இதை அனைவரும் முக்யமாக இளைஞர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துத் தருகிறோம். மூலத்தையும் ராகத்தோடு படிக்கவும். மிக ரஸமாக இருக்கும். (ஆர்)

### लक्ष्मीस्वभाव:

**आलोकयतु तावत् कल्याणाभिनिवेशी लक्ष्मीमेव प्रथमम् । इयं हि सुभटखड्गमण्डलोत्पलवनविभ्रमभ्रमरी लक्ष्मीः क्षीरसागरात् पारिजातपल्लवेभ्यः रागम्, इन्दुशकलाद् एकान्तवक्रताम्, उच्चैःश्रवसः चञ्चलताम्, कालकूटात् मोहनशक्तिम्, मदिरायाः मदम्, कौस्तुभमणेः अतिनैष्ठुर्यम् इत्येतानि सहवासपरिचयवशाद् विरहविनोदचिह्नानि गृहीत्वा एव उद्गता ।**

நன்மையில் ஆவல் கொண்ட நீ, முதலில் இந்த லக்ஷ்மியைப் பார். இவள் நல்ல வீரர்களின் கத்தி எனும் அல்லிக் காட்டில் ஓய்வெடுக்கும் வண்டுபோல் இருக்கிறாள். பாற்கடலிலிருந்து உதிக்கும் பொழுதே, பாரிஜாத இலைகளிலிருந்து ராகத்தையும் (**रागं**- அனுராகம், சிவப்பு நிறம்), இளம்பிறை நிலவிடமிருந்து ஒருதனிவிதமான வக்ரத் தனத்தையும், உச்சைஸ்ரவஸ் எனும் இந்திர குதிரையிடமிருந்து நிலையற்ற

நிலைமையையும், காலகூட விஷத்திடமிருந்து மயக்கச் சக்தியையும், மதுவினிடமிருந்து மயக்கத்தையும், கௌஸ்துப மணியிடமிருந்து கடினத் தனத்தையும் - இவைகளுடன் சேர்ந்து வாழ்ந்த பரிசயத்தால் பிரிந்திருக்கையில் மனோ வினோதத்திற்காகப் பொருட்களை எடுத்துக்கொண்டு வந்தார் போல் விளங்குகிறாள்.

**न हि एवंविधम् अपरम् अपरिचितम् इह जगति किञ्चिद् अस्ति । यथा इयम् अनार्या लब्धा अपि खलु दुःखेन परिपाल्यते । दृढगुणपाशसन्दाननिस्पन्दीकृता अपि नश्यति । उद्दामदर्पभटसहस्रोल्लासितासिलतापञ्जरविधृता अपि अपक्रामति । मदजलदुर्दिनान्धकारगजघटितघनघटापरिपालिता अपि प्रपलायते ।**

இவ்வுலகில் லக்ஷ்மியைப் போல் பரிசயத்திற்கு உகந்த மரியாதையை கொடுக்காதவர் வேறொருவர் கிடையாது. லட்சுமியை அடைந்தவன் மிகவும் சிரமத்துடன் காப்பாற்ற வேண்டும். திடமான நற்குணங்கள் எனும் பாசத்தால் கட்டப்பட்டு அசைவற்றவளாகச் செய்த பொழுதிலும் மறைந்து விடுகிறாள். மிகுந்த அகங்காரம் கொண்ட ஆயிரம் போர் வீரர்களின் கத்தி முனையெனும் கூண்டில் அடைக்கப்பட்டவளாக இருந்தும் தப்பித்து விடுகிறாள். மத ஜலம் ஒழுகும் இளம் கரிய மேகக் கூட்டங்கள் திகழும் யானைகளால் காப்பாற்றப்பட்ட போதிலும் ஓடி விடுகிறாள்.

**न परिचयं रक्षति । न अभिजनम् ईक्षते । न रूपमब आलोकयते । न कुलक्रमम् अनुवर्तते । न शीलं पश्यति । न वैदग्ध्यं गणयति । न श्रुतम् आकर्णयति । न धर्मम् अनुरुध्यते । न त्यागम् आद्रियते । न विशेषज्ञतां विचारयति । न आचारं पालयति । न सत्यम् अनुबुध्यते । न लक्षणं प्रमाणीकरोति । गन्धर्वनगरलेखा इव पश्यतः एव नश्यति ।**

ஒருவன் வெகு அறிமுகமானவன் என்ற காரணத்தினால் அந்தப் பரிசயத்தை லக்ஷ்மியானவள் பரிபாலிப்பதில்லை. அதே போல் அவனின் உயர்ந்த குலத்தைப் பார்ப்பதில்லை. அழகை கவனிப்பதில்லை. சந்ததியின் வரிசையை பின்பற்றுவதில்லை. நன்னடத்தையை உணர்வதில்லை. வல்லுநரை எண்ணுவதில்லை. சாஸ்திரத்தைக் காது கொடுத்துக் கேட்பதில்லை. தர்மத்தை தழுவுவதில்லை. தியாகத்தைப் பொருட்படுத்தவில்லை. விசேஷ அறிவை கண்டு கொள்வதில்லை. ஆசாரத்தை பரிபாலிப்பதில்லை. சத்தியத்திற்கு கட்டுப்படாதவள். இலக்கணத்தைப் பிரமாணமாகக் கொள்வதில்லை. மேகத்தில் தென்படும் கந்தர்வ

நகரம்போல் பார்த்துக் கொண்டே இருக்கையில் நம்மைப் பாராமல் அழிந்து விடுகிறாள். அதாவது செல்வம் அடைந்த ஒருவன் செல்வத்தை காப்பாற்றிக் கொண்டே இருக்கையில் அந்த செல்வம் அவனை விட்டு நழுவுகிறது.

**अद्यापि आरूढमन्दरपरिवर्तावर्तभ्रान्ति–जनितसंस्कारा इव परिभ्रमति ।**

பாற்கடலைக் கடையும்பொழுது மந்தர மலையின் அசைவினால் பயிற்சி பெற்றவள் போல் இந்த லக்ஷ்மி இன்றைக்கும் ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் அங்கும் இங்கும் அலைகிறாள்.

**कमलिनीसंवरणव्यतिकरलग्ननलिननालकण्टका इव न क्वचित् निर्भरम् आबध्नाति पदम् ।**

(தாமரைப் பூவின் தண்டில் முட்கள் உண்டு. முட்கள் குத்தினால் காலைப் பதித்து ஓர் இடத்தில் வைக்க இயலாது. அதை இங்கு அழகாகக் கவி லக்ஷ்மியிடன் இருப்பதாக வர்ணிக்கிறார், ஏனெனில் லக்ஷ்மியின் வாசஸ்தலம் தாமரை.) எப்பொழுதும் தாமரைப் பூவின் சம்பந்தம் இருப்பதால் அதில் இருக்கும் முட்கள் தன் மீது சேர்ந்திருந்தாற் போல், லக்ஷ்மியானவள் நிலைத்து ஓர் இடத்தில் காலை வைப்பதில்லை.

**अतिप्रयत्नविधृता अपि परमेश्वरगृहेषु विविधगन्धगजगण्डमधुपानमत्ता इव परिस्खलति ।**

செல்வந்தர்கள் வீட்டில் வளர்க்கப்படும் யானைகளுக்கு மதம் பிடித்தால் அவைகளை எப்படி மிகவும் சிரமப்பட்டு சங்கிலியால் கட்டி, வீட்டு வாசலில் வைத்து, அவர்களைக் கண்காணிப்பார்களோ, அதுபோல் செல்வந்தர்கள் தம் வீட்டில் உள்ள லக்ஷ்மியை வெளியில் போகாமல் மிகவும் கவனமாக அதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். அப்படி இருந்த பொழுதும் மதம் பிடித்த யானை எப்படி எல்லா தடைகளையும் உடைத்து வெளியே செல்கிறதோ அதுபோல் செல்வந்தர் வீட்டில் இருக்கும் லக்ஷ்மியும் நழுவி விடுகிறாள்.

**पारुष्यम् इव शिक्षितुम् असिधारासु निवसति । विश्वरूपत्वम् इव ग्रहीतुम् आश्रिता नारायणमूर्तिम् । अप्रत्ययबहुला च दिवसान्तकमलम् इव समुपचितमूलदण्डकोशमण्डलम् अपि मुञ्चति भूभुजम् । लता इव विटपकान् अध्यारोहति ।**

கூர்மையாக இருப்பதற்கு கற்றுக் கொள்பவள் போல் கத்திகளின் கூர்மையான முனைகளில் குடியிருக்கிறாள். விஸ்வரூபம் எடுக்க ஆசைப்பட்டு நாராயணரின் உருவத்தை ஏற்றுக்கொள்கிறாள். (அரசர்கள் நாராயணரின் ஒரு அம்சம் என்று புராணங்களில் உள்ளது.) பொழுதின் முடிவில் எவ்வாறு ஒரு தாமரை வாடிப் போய்த் தன்னுடைய தண்டை விட்டு விழுகிறதோ அவ்வாறு இந்த லக்ஷ்மி விசுவாசம் இல்லாதவளாக நன்கு சேகரிக்கப்பட்ட மூலதனத்தை உடைய அரசனையும் விட்டு விலகுகிறாள். கொடி எவ்வாறு மரங்களை அண்டி இருக்குமோ அவ்வாறு லக்ஷ்மியும் கெட்டவர்களின் சகவாசத்தை சார்ந்து இருக்கிறாள்.

**गङ्गा इव वसुजननी अपि तरङ्गबुद्बुदचञ्चला । दिवसकरगतिः इव प्रकटितविविधसङ्क्रान्तिः । पातालगुहा इव तमोबहुला । हिडिम्बा इव भीमसाहसैकहार्यहृदया । प्रावृड् इव अचिरद्युतिकारिणी । दुष्टपिशाची इव दर्शितानेकपुरुषोच्छाया । स्वल्पसत्त्वम् उन्मत्तीकरोति । सरस्वतीपरिगृहीतम् ईर्ष्यया इव न आलिङ्गति जनम् ।**

கங்கை எவ்வாறு அஷ்ட வசுக்களின் தாயாகவும் அலைகளுடன் சஞ்சலமாகவும் இருக்கிறாளோ, அதுபோல் லக்ஷ்மியும் எட்டு விதமான செல்வங்களுக்குப் பிறப்பிடமாக இருப்பினும் அலைகள்போல் இங்கும் அங்கும் அலைகிறாள். சூரியன் எவ்வாறு ஒரு ராசியிலிருந்து இன்னொரு ராசிக்கு செல்கிறானோ அதுபோல் லக்ஷ்மியும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் சென்று கொண்டே இருக்கிறாள். பாதாள குகைபோல் பேரிருளை கொண்டவள் (பலத்த அஞ்ஞானத்தை கொடுப்பவள்). இடும்பா என்ற பெண்ணின் இதயம் எவ்வாறு பீமனுடைய செயலால் இழுக்கப்பட்டதோ, அதுபோல் லக்ஷ்மியும் பீமன் போன்ற சாகசத்தைக் கொண்டவனால் கவரப்படுகிறாள். மழைக்கால மின்னலைப் போல் அடிக்கடி தன்னை காண்பித்து மறைக்கிறாள். பெண் பேய்போல் மனிதர்களுக்குப் பலவிதமான மேன்மையை காண்பித்து ஏமாற்றுகிறாள். சரஸ்வதியின் கடாக்ஷம் பெற்ற வித்வான்களை, பொறாமை கொண்டவள் போல் தழுவுவதில்லை.

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



**ஜன** 24 - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அருளாசிகளின்படி ஸ்ரீ P.R. கண்ணன் அவர்களால் ''ஸ்ரீமத் பகவத் கீதை'' விரிவுரை நிகழ்வு 25-01-25 முதல் ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் நடைபெறுமாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**ஜன** 25 - பிரயாக்ராஜ் இடத்தில் கும்பமேளாவை முன்னிட்டு சத சண்டி மஹாயக்ஞ பாகவத பாராயணம் நடைபெற்றது.

**ஜன** 26 - போளூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் பள்ளி மாணவர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் வழங்கி அனுக்ரஹித்தார்கள்.

பிராயக்ராஜில் நடைபெற்று வரும் கும்பமேளா நிகழ்ச்சிக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஹிந்தியில் அனுக்ரஹபாஷணம் அளித்தருளினார்கள்.

முன்னதாக முந்தைய நாள் சிதம்பர க்ஷேத்ரத்திலிருந்து வரப்பெற்ற கோயில் பிரசாதங்கள் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டது.

**ஜன** 30 - ஷட சண்டி ஹோம கலச தீர்த்தம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது.

விழுப்புரம் மாவட்டத்தில் ஜம்பை என்ற இடத்திலுள்ள ஸ்ரீ ஜம்புநாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் விஜயம் செய்து கோயில் கும்பாபிஷேகத்தின் அங்கமான யாக சாலை பூஜைகளில் கலந்து கொண்டு, கூடியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருள் செய்தார்கள்.

மேலும் கோவில் அனைத்து சந்நிதிகளிலும் பூஜைகளும் செய்து அருளினார்கள்.

**பிப் 3** – பிரயாக்ராஜில் கும்பமேளாவை முன்னிட்டு ருத்ராபிஷேகம் நடைபெற்றது.

**பிப் 4** – பிராயாக்ராஜ் கும்பமேளாவை முன்னிட்டு இஷ்வாய்யா உபநிஷத் பாராயணம் நடைபெற்றது.

**பிப் 5** – ரத சப்தமியை முன்னிட்டு செய்யாறு அருகில் உள்ள கலசபாக்கத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் ஸ்நானம் செய்தருளினார்கள். ஸ்ரீ அண்ணாமலையாரின் தீர்த்தவாரியும் நடைபெற்றது.

**பிப் 8** – பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் காஞ்சிபுரம் ஏனாத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி விஷ்வ மஹா வித்யாலயா சர்வ கலா சாலைக்கு விஜயம் செய்து பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பட்ட படிப்பு முடித்தவர்களுக்கு ஆசி வழங்கி அனுக்ரஹ பாஷணமும் அளித்தருளினார்கள்.

**பிப் 9** – பிரயாக்ராஜ் கும்பமேளாவில் ஸ்ரீ சுவாமி கோவிந்தகிரி மஹராஜ் அவர்களால் பகவத் கதா ஞான யாகம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜைகள் முடிந்து முகாம் திருச்சி திருவானைக் கோவிலுக்கு புறப்பட்டது.

சங்கராசார்ய சுவாமிகள் திருவானைக் கோவில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாளுக்கு தாடங்க பிரதிஷ்டை செய்ய உள்ளதை முன்னிட்டு பிப்ரவரி 13 முதல் 16 வரை மஹோத்ஸவ நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

**பிப் 10** – கடந்த நாள் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் திருவானைக் கோவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு வித்யா ஸ்தானத்திற்கு விஜயம் செய்த போது பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்கள்.

இன்று இரவு விசேஷ பிரதோஷ பூஜை நடைபெற்றது.

பிரயாக்ராஜ் கும்பமேளாவில் ரிக் வேத, சம்ஹிதா ஹோமம் நடைபெற்றது.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் நாகப்பட்டினம் ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோஹனீஸ்வர சுவாமி கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

**பிப் 11** - இன்று காலை ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் இருகால பூஜைகள் முடிந்து இரவு விசேஷ பௌர்ணமி பூஜையும் நடைபெற்றது. முன்னதாக தஞ்சைக்கு அருகில் உள்ள புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு விஜயம் செய்தார்கள்.

பிப்ரவரி 13 முதல் 15 வரை தாடங்க பிரதிஷ்டா யாகசாலை பூஜைகள் வெகு விமரிசையாக வேத பாராயண நிகழ்வுகளுடன் நடைபெற்றன.

**பிப் 16** - இன்று ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாளுக்கு பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் தாடங்க பிரதிஷ்டை செய்விக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பக்த கோடிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அம்பாளின் அனுக்ரஹம் பெற்று உய்த்தார்கள்.

**பிப் 19** - பிரயாக்ராஜ் கும்பமேளாவில் காமேஸ்வர காமேஸ்வரி ஹோமம் நடைபெற்றது.

**பிப் 20** - இன்று மாக கிருஷ்ண அஷ்டமி, அத்வைத வித்தையின் ஸம்ரக்ஷண ப்ரசாரங்களுக்காக அத்வைத சபையை ஸ்தாபித்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 66 சங்கராசார்யார் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி (6) ஸ்ரீ சரணர்களின் ஆராதனை திதியாகிய இன்று அவர்தம் ஆராதனை நிகழ்வுகள் கலவையில் நடைந்தேறியது.

முகாமிலும் காலை 7.00 மணி முதல் 12.00 மணி வரை ரிக் சம்ஹிதா ஹோமம் அத்யாபகர் ப்ரம்மஸ்ரீ ஆர். சுப்ரமணிய கனபாடிகள் தலைமையில் நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ பெரியவா ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜைகள் முடித்து 66வது பீடாதிபதி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆராதனை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

பின்னர் முகாம் தஞ்சை அருகில் உள்ள திருமலை சமுத்திரம் சாஸ்த்ரா பல்கலை கழகத்திற்கு புறப்பட்டது.

மாசி மாத அனுஷ நக்ஷத்திரத்தன்று திருவானைக்கோவில் ஸ்ரீ சங்கர மடத்தில் காலை முதல் ஆவஹந்தி ஹோமம், அபிஷேகம் க்ரமார்ச்சனைகள் மற்றும் மஹா ஹாரத்தி பூஜ்ய ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு நடைபெற்றன. மாலை 6.15 மணியளவில் ஸ்ரீ மஹா பெரியவா சித்ரபட ஊர்வலம் திருவானைக்கோவில் நான்கு மாட வீதியில் வேத பாராயணம், மங்கள வாத்யங்களுடன் நடைபெற்றது. ப்ரதி மாதம் அனுஷம், உத்ராடம் அவிட்டம் நக்ஷத்திரங்களில் பூஜ்ய ஸ்ரீ பெரியவர்களுக்கு விசேஷ பூஜைகள் திருவானைக்கோவில் ஸ்ரீ சங்கர மடத்தில் நடைபெற்று வருகிறது.

பிப் 22 - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 57வது ஜெயந்தி மஹோத்சவம் தண்டலத்தில் வேதபாராயணம், நாம சங்கீர்த்தன நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

பிப் 23 - ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் பிரயாக்ராஜ்க்கு விஜயம் செய்து திரிவேணி சங்கமத்தில் கும்பமேளா ஸ்நானம் செய்தருளினார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளுடன் ஸ்ரீ வித்யா சகடபுரம் மடத்தின் பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ கிருஷ்ணானந்த தீர்த்த சுவாமிகளும் கலந்து கொண்டார்கள். காஞ்சி ஆச்சார்யா மற்றும் சகடபுரம் சுவாமிகள் சங்கல்பம், ஸ்நானம் மற்றும் கங்கை பூஜைகள் செய்து தான, தர்மங்கள் வழங்கி அனுக்ரஹித்தார்கள்.

பிரயாக்ராஜ் ஸ்ரீ ரமணி சாஸ்திரிகள் வேத சடங்குகளை செய்வித்தார்கள்.

பின்னர் பிரயாக்ராஜ் செக்டார் 20ல் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பாக கும்பமேளா நிகழ்விற்காக அமைக்கப்பட்ட கூடாரத்தில் நடந்த நிகழ்ச்சியில் உத்திரபிரதேச முதலமைச்சர் ஸ்ரீ யோகி ஆதித்யநாத் கலந்து கொண்டு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளை கௌரவித்தார்கள். அது சமயம் ருத்ர யக்ஞ பூர்ணாஹுதியும் நடைபெற்றது.

தொடர்ந்து பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் மற்றும் பயண குழுவினர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கர விமான மண்டபத்திற்கு வருகை தந்தனர். பிரயாக்ராஜ் புனித ஸ்தலத்திற்கு வருகை தரும் பக்தர்களுக்கு இந்த கோபுர விமான மண்டபம் கண்கொள்ளாத காட்சியாக அமையப் பெற்றதாகும்.

முன்னதாக விமான நிலையத்தில் காலை 11.30 மணியளவில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வருகை தந்தபோது உத்திரபிரதேச அரசு அதிகாரிகளால் சம்பிரதாய முறைப்படி வரவேற்கப்பட்டு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளின் பயண முடிவு வரை உடன் இருந்து இரவு 8.00 மணியளவில் புறப்படும் வரை இருந்து வழியனுப்பி வைத்து மரியாதை செய்தார்கள். விஜயத்தின் இடையே பெருந்திரளான மக்கள் கூட்டம் அலை மோதிய போதும், அரசு அதிகாரிகள் தகுந்த முறையில் முறைப்படுத்தி வழி நடத்தினார்கள்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசும் போது பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் பொது மக்களின் நம்பிக்கை, பொறுமை, அமைதி ஆகியவற்றையும், சனாதன தர்மத்தின் உயர்வையும், கும்பமேளாவின் குறிப்பிடத்தக்க தானத்தையும், இதில் மாநில, மத்திய அரசுகளின் முயற்சிகளையும் பாராட்டினார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் விஜயத்தின் போது பக்தர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் ஆக்ஞைக்கு இணங்க காஞ்சி மடம் பிரயாக்ராஜில் செக்டார் 20ல் பிரத்யேக கூடாரம் அமைத்து வேத பாராயணங்கள், ஹோமங்கள், ப்ரவசனங்கள், கலை நிகழ்ச்சிகள் நடைபெறவும், தெற்கிலிருந்து வரும் யாத்ரீகர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அனைத்து மக்களின் க்ஷேமத்திற்காக சித்தர கூடம், லக்னோ, காசி மற்றும் அயோத்தியா ஆகிய இடங்களில் காஞ்சி மடத்தினால் நடத்தப்படும் பாடசாலை வித்யார்த்திகளைக் கொண்டு வேத பாராயணங்களும், சென்னை வைதீகர்களைக் கொண்டு பிரத்யேக ஷண்மத ஹோமங்கள், சென்னை, மும்பையைச் சேர்ந்த பண்டிதர்களைக் கொண்டு ரிக்வத ஹோமம், ருத்ர ஹோமம், மற்றும் துர்கா ஹோமம், காமகோடி மகளிர் வித்யார்த்திகள் மூலம் சமூஹிக ஸ்தோத்திர பாராயணம், துர்கா சப்தசதி யக்ஞம், அன்னதானம், சுவாமி கோவிந்ததேவ் குருஜி அவர்களின் பாகவத சொற்பொழிவு ஆகியவை காஞ்சி மடத்தின் மூலம் அமைக்கப்பட்ட பிரத்யேக பந்தலில் (கூடாரத்தில்) கும்பமேளா காலம் வரை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைபெற்றன.

மக்கள் கூட்டத்தின் காரணமாகவும், ஏனைய சுற்று சூழல்கள் காரணமாகவும் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு இடையேயும், பண்டிதர்கள், பாடசாலை வித்யார்த்திகள், விழா ஏற்பாட்டாளர்கள், கைங்கர்யகாரர்கள் அனைவரும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளின் வழிகாட்டுதலின்படி அவர்களது பரிபூரண உழைப்பை மேற்கொண்டார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளின் விஜயம் பிரயாக்ராஜ் முகாமிற்கு புத்துணர்வு ஏற்படுத்தியது. தொடர்ந்து சிவராத்திரியுடன் முடிவடையும் மூன்று நாட்களுக்கு அதிருத்ர பாராயணமும் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

**பிப் 24** - பிரயாக்ராஜ் விஜயத்தின் போது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 70வது பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் தேசத்தில் உள்ள அனைத்து திருக்கோவில்களையும் அரசு கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க வாதிட்டார்கள்.

ஒவ்வொரு கும்பமேளா சமயத்திலும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. 2013ல் ராமர் கோவிலுக்காக எழுப்பப்பட்டது. 2025ல் திருக்கோவில்களை அரசு கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்க எழுப்பப்பட்டுள்ளது என பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

முதலில் கோவில்கள் விடுவிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக முறையான பூஜைகள் நடத்தப்பட வேண்டும். மூன்றாவதாக கோவில்களுக்கு பெறப்படும் காணிக்கைகள் அந்தந்த கோவில்களுக்கே சேர வேண்டும் என்றும், இவ்வாறு பெறப்படும் காணிக்கைகள் சனாதன தர்மத்தை பரவச் செய்யும். மக்களை வேத விற்பன்னர்களாக உருவாக்கவும், குருகுலம் மற்றும் கோசாலைகள் ஏற்படுத்தவும், சம்பிரதாய இசையை பேணவும் செலவிடப்பட வேண்டும் எனவும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

மூன்று அம்சங்கள், பக்தர்கள், பண்டிதர் மற்றும் பூஜாரி ஆகியவை கொண்டதாக வழிமுறை இருக்க வேண்டும். இந்த மூன்றுமான திரிவேணி கண்டிப்பாக கோவில்கள் மட்டுமல்லாது சனாதன தர்மத்தையும் மேம்படுத்தும் என்றும், ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு பூஜாரியும், ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு கோவிலும் திருப்பதியை போன்று ஒவ்வொரு கிராமத்திலும் இருக்க வேண்டும் என்றும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் குறிப்பிட்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளிடம் இளைஞர்கள் தற்போது ஆன்மீகத்திலிருந்து விலகுகிறார்களா என்று கேட்கும் போது, பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் இது உண்மை இல்லை என்றும், இங்கு கும்பமேளாவில் அநேக சிறுவர்களும், சிறுமிகளும் வந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் நெற்றியில் திலகம் அணிந்து முழு பக்தியுடன் காணப்படுகிறார்கள் என்றும் குறிப்பட்டார்கள். மேலும் நம் நாட்டில் பக்திநெறி உள்ளது என்றும், நம்மிடையே சட்டதிட்டங்களிலும், கட்டமைப்புகளிலும் பின்னடைவில் உள்ளோம் என்றும் குறிப்பிட்டார்கள்.

மேலும் குறிப்பிடுகையில் நாட்டில் நிறைய கஷ்டங்கள், குடும்பத்தில் கஷ்டங்கள் உள்ள நிலையில் நம் குடும்பங்களிலிருந்து நாம் சனாதன தர்மத்தை காப்போமானால் நமது சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

நமது நாட்டை வலுவுள்ளதாக சண்டை சச்சரவுகளின்றி சனாதன தர்மத்தின் முக்கியத்துவத்தை வழிவழியாக முன்னோர்கள் பரவச் செய்தார்கள். இந்த கும்பமேளாவில் நாம் பெற்ற வெற்றிகள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் அனைத்தையும் பத்திரமாக பதிவு செய்வதன் மூலம் உத்திரபிரதேச அரசுக்கு மட்டும் அல்லாது ஒட்டி அமைந்துள்ள பீகார், மத்ய பிரதேசம் ஆகிய மாநிலங்களும் இதுபோன்ற பத்திரப்பதிவுகள் கும்பமேளா போன்ற விழாவின் போது உதவும் எனவும் தெரிவித்தார்கள்.

எப்போதெல்லாம் சனாதன தர்மத்திற்கு சவால்கள் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்யார்கள் சனாதன தர்மத்தை காக்க உறுதியாக முன்நிற்பார்கள் என்றும் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் ராம ஜென்ம பூமியை மீட்டெடுக்கும் முயற்சியில் பாதை அமைத்து சனாதன தர்மத்தை மீண்டும் பிரகாசிக்க செய்தமையை எப்போதும் நினைவு கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் எந்த மூலை முடுக்கிலும் சனாதன தர்மத்திற்கு இன்னல்கள் (கஷ்டங்கள்) ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் சங்கராசார்யர்கள் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும், பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் இருவருமாக சேர்ந்து நேபாள் மற்றும் இதர இடங்களுக்கு விஜயம் செய்து நீண்ட நாட்கள தங்கி போராட்டங்கள், அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு சனாதன தர்மத்தை காக்க தங்களால் ஆன முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

மேலும் உலகில் எங்கெல்லாம் சனாதன தர்மத்திற்கு இடையூறுகள் ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் அதனை காக்க முழு ஒத்துழைப்பும் ஆசிகளையும் வழங்கி வருகிறது.

இந்த ஒரு நாள் கும்பமேளாவில் உத்திரபிரதேசத்திற்கு மட்டுமல்லாமல் அதனை சார்ந்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு முக்கயமான ஒரு நாளாகும்.

பிப் 24 - பூர்வ மீமாம்ஸ ஸூத்ர புஸ்தகம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் மாக கிருஷ்ண ஏகாதசி தினத்தில் சாஸ்த்ரா பல்கலை கழகத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சி காமகோடி தொலைக்காட்சியிலும் நேரிடை ஒளிபரப்பு செய்யப்பட்டது.

பிப் 25 - பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 57 வது ஜெயந்தி மஹோத்ஸவம் திருவானைக் கோவிலில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக காலையில் காத்திருந்த பக்தர்களுக்கு முதலாவதாக பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் விஸ்வரூப தரிசனம் அளித்தருளினார்கள். தொடர்ந்து ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையின் பொருட்டு கோ பூஜையும் நடைபெற்றது. பூஜை மண்டபத்திற்கு பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் செல்லும் முன்பாக பக்தர்கள் சமர்ப்பித்த மலர் மாலைகள், மலர் கிரீடங்கள் மற்றும் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஜயந்தி மஹோத்ஸவம், காஞ்சிபுரம், திருவானைக்கோவில் மற்றும் பல்வேறு இடங்களிலும் நடைபெற்றது.

பூஜைக்கு பிறகு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் யாக சாலையில் நடைபெற்ற மஹாருத்ரம், சண்டி ஹோம பூர்ணாஹுதி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள். பூஜிக்கப்பட்ட மந்திர தீர்த்தங்களால் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு வேத மந்திரங்கள் முழங்க அபிஷேகம் செய்விக்கப்பட்டது.

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், ஸ்ரீ பங்காரு காமாக்ஷி திருக்கோவில், தஞ்சாவூர், திருமலை திருப்பதி ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோவில், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கோவில் திருவானைக்காவல், ஸ்ரீ ரங்கம் திருக்கோவில், ஸ்ரீ உச்சிப் பிள்ளையார் கோவில் மலைக்கோட்டை, ஸ்ரீ சமயபுரம் மாரியம்மன் கோவில், அன்னவரம் ஸ்ரீ சத்ய நாராயணசுவாமி கோவில், சிம்ஹாசலம் ஸ்ரீ வராஹ லஷ்மி நரசிம்ம சுவாமி கோவில், ஸ்ரீ கனக மஹா லஷ்மி கோவில், ஸ்ரீ போதேந்திர சரஸ்வதி பிருந்தாவனம், மாவட்ட குடி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோவில், சிறுவாச்சூர் மதுரகாளியம்மன கோவில் மற்றும் பல்வேறு கோவில்களிலிருந்து கொண்டு வரப்பட்ட பிரசாதங்கள் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகளுக்கு வழங்கப்பட்டன.

கன்யா பூஜை, வடுக பூஜை, தம்பதி பூஜைகளும் நடைபெற்று வருகை தந்த பக்தர்கள் அனைவரும் கண்டுகளித்தார்கள்.

காஞ்சிபுரம் ஸ்ரீ மடத்திலும் 23, 24, 25-02-2025 ஆகிய மூன்று நாட்களிலும் சதுர்வேத பாராயணம், வேத ஸதஸ் மற்றும் கர்நாடக சங்கீத இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. ஜெயந்தி தினத்தன்று ஏகாதச ருத்ர ஜப ஹோமம், பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் மற்றும் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்த்ர பெரியவா பிருந்தாவனங்களில் விசேஷ அபிஷேகங்கள் தீப ஆராதனைகளும் நடைபெற்றன.

திருவானைக் கோவில் முகாமில் மாலை பிரதோஷ பூஜையும் பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் நடத்தி அருளினார்கள்.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 28

## ஸ்ரீ அனுபூதி ஸ்வரூபாசார்யர்

அனுபூதி ஸ்வரூபாசார்யர் அத்வைத சித்தாந்தத்திற்கு வளமூட்டக்கூடிய பல நூல்களைப் படைத்திருந்தாலும் வ்யாகரண சாஸ்திர வல்லுனராகச் சான்றோர்களால் பெரிதும் போற்றப்படுகிறார். இவர் ஸ்ரீ சங்கரபகவத் பாதரின் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யத்திற்கு 'ப்ரகடார்த்த விவரணம்' என்ற அற்புதமான ஒரு உரை எழுதியுள்ளார். எல்லா உபநிஷத்துக்களுக்கும் இவர் உரை எழுதியுள்ளதாக அறியப்படுகிறது. எனினும் அவையாவும் இதுவரையில் கிடைக்கவில்லை. மேற்கூறிய 'பிரகடார்த்த விவரணம்' தவிர ப்ரமாண ரத்ன மாலா வ்யாக்யாணம், கௌடபாதீய பாஷ்யடிப்பணி, ஸாரஸ்வத ப்ரக்ரியா என்ற இலக்கண நூல் போன்ற நூல்களை எழுதியுள்ளார். பூர்வாச்ரமத்தில் ஜனார்த்தனர் என்று அழைக்கப்பட்ட ஆனந்தகிரிக்கு இவர் குரு. இவர் தென்பாரத தேசத்தைச் சேர்ந்தவராக அறியப்படுகிறார்.

விமுக்தாத்மரின் 'இஷ்டஸித்தி' நூலுக்கு 'இஷ்ட ஸித்தி விவரணம்' என்ற உரை எழுதியுள்ளார். ஸ்ரீ ஹர்ஷரின் கண்டன கண்ட காத்யத்திற்கும் உரை வாசஸ்பதி மிச்ரரின் வாதங்களை இவர் ஏற்கவில்லை. இவரது பாமதி வியாக்யானத்திற்கு கல்பதரு என்ற உரை எழுதிய 'அமலானந்தர்' பெயர் குறிப்பிடாமல் ஸ்ரீ அனுபூதி ஸ்வரூபாசர்யரின் கண்டனத்திற்குப் பதில் கூறுகிறார். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் தனது ஸித்தாந்த லேச ஸங்க்ரஹத்தில் இவரது நூலை எடுத்தாள்கிறார்.

ஸ்ரீ அமலநாதர் கி.பி. 13 - ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராக அறியப்படுகிறார். அனுபூதி ஸ்வரூபாசார்யர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருக்க வேண்டும். அவித்யை பற்றிய இவரது விளக்கம் எல்லா அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஈச்வரன், ஜீவன், ஜகத் இம்மூன்றும் அவித்யையினால் தோன்றுபவை. மூன்றின் தோற்றத்திற்கும் ஆதாரமான ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம். விவரண வாதத்தைப் பெரிதும் போற்றும் ஸ்ரீ அனுபூதி ஸ்வரூபாசார்யர் அவித்யை, மாயை இரண்டையும் வேறுபடுத்திப் பேசவில்லை. தனது ப்ரகடார்த்த விவரணத்தில் இதுபற்றி விரிவாக விவரித்துள்ளார். மாயையின் ஒரு கூறுதான் அவித்யை என்கிறார். குஞ்சாலாடுதான் மாயை என்றால் அதில் இணைந்துள்ள இனிப்பு தோய்ந்த பூந்தி அவித்யை எனலாம். அவித்யையில் பிரதிபலிக்கும் சுத்த சித் சொரூபமே ஜீவன். மாயையில் பிரதிபலிக்கும் இதுவே ஈச்வரனாக

அறியப்படுகிறது. இரண்டையும் கடந்து நிற்பது சுத்த சைதன்யம். அவித்தையை கணக்கற்றவை. மாயை ஒன்றுதான். அனந்த அவித்யையில் பிரதிபலிப்பவை எண்ணற்ற ஜீவர்கள். அவித்யா நீக்கமே ஜீவனுக்கு மோக்ஷம் என்று அறியப்படுகிறது. குறிப்பிட்ட ஜீவன் ஞானம் பெற்று மோஷமடைந்தாலும் மாயையின் காரியமான ஜகத் தோன்றி கொண்டுதானிருக்கும். முக்தன் இந்த ஜகத்தை ப்ரஹ்மமாகவே காண்பான். ஜகத் தெரியாது. நிறமிருந்தாலும் நிறக்குருடன் நிறத்தைக் காணமாட்டான். எல்லா ஜீவர்களும் ப்ரஹ்ம ஞானம் பெற்று முக்தி அடையும் போதே மாயை ஒடுங்கும். சிரவண மனன, நிதித்யாஸனத்தால் ஒருவன் இந்த ஞானத்தைப் பெற முடியும்.

(தொடரும்)


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



முன் கதை திருப்பதியில் இருந்த மருமகன் சுப்ரமணியம் திரிபுராவில் அடிபட்டு இருக்கிறார். ஆசார்யாள் அனுக்ரஹத்தை கடிதம் மூலம் தன் பெண்ணுக்குத் தெரிவிக்கிறார். மருமகன் ஏன் த்ரிபுராவிற்குப் போனான் என்று தெரியாமல் இருந்த எனக்கு நான் எழுதிய கடிதத்திற்கு 3 மாதங்கள் கழித்துக் கடிதம் வந்தது. அதன் சாரம் இதுதான்.

த்ரிபுராவில் நிலைமை சீர்கேடாக உள்ளது. அதை விசாரித்து தகவல் அனுப்பவும் என்று மத்ய அரசால் ஆணை இடப்பட்டு டில்லி சர்கார் என் மருமகனை அங்கு அனுப்பியது. அவனும் குறைகளைக் கண்டுபிடித்து அவைகளை நிறை செய்ய வேண்டிய விஷயங்களை ரிபோர்ட் தயாரித்து அனுப்பி வைத்தான். அது த்ரிபுரா முதல்வருக்கும் கார்யதர்சிக்கும் பிடித்திருந்தது. ஆனால் ஹோம் இலாகா மந்த்ரிக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய வேலையை முடக்கச் சதி நடந்தது.

த்ரிபுராவில் அவனுக்கு பங்களா கொடுத்திருந்தார்கள். அவன் மட்டுமிருந்தான். ஒரு நாள் வெளியே போன போது குண்டர்களால் தாக்கப்பட்டு மயங்கி வீழ்ந்தான். பின்பு எப்படியோ சமாளித்து வீடு வந்தான். அங்கிருந்த காவற்காரன்

தகவலை கார்யதர்சிக்குச் சொல்லி கல்கட்டா மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். மயங்கிய நிலையிலும் 'என்னைக் கொல்லப் போகிறார்கள்' என்று கூறிக் கொண்டிருந்தான். மருமகளுக்கும் அச்சுறுத்தல் போன் கால்கள் வந்தன. அவள் ஆஸ்பத்ரிக்கு வந்து அவனை டெல்லி AIIMS மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அனுமதி கேட்க, டாக்டர்கள் மறுத்துவிட்டனர். RISK ஐ ஏற்பதாகக் கூறி டில்லி மருத்துவமனைக்குக் கூட்டிப் போனாள்.

அவனை அங்கிருந்த மருத்துவர்களுக்குத் தெரியும். அவனை பரிசோதித்து விட்டு அவனது மூளையைப் பற்றிக் கவலை வேண்டாம். உடம்பு அடிகளுக்கு சிகிச்சை செய்தால் போதும் என்று கூறி 3 மாதம் சிகிச்சை செய்தனர். அவனும் பிழைத்து விட்டான். இதில் விசேஷம் என்னவெனில் நான் பெரியவாளிடம் ப்ரஸ்தாபித்த நாளில் தான் டில்லி டாக்டர்கள் அபாயமில்லை என்று கூறினர். பெரிய பவ ரோகத்தையே போக்கும் பெரியவா அனுக்ரஹமின்றி இது நடந்திருக்காது என்பதை உணர்ந்தேன். அபாயத்தை போக்கிய உபாயம் பெரியவா.

வாழ்க பெரியவா.

(தொடரும்)

# கற்பின் சிகரங்கள் பேசினால்

*வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்*

**ஆதாரம்: வால்மீகி இராமாயணம்**

**அயோத்யா காண்டம் ஸர்கம் 117, ஸர்கம் 118**

**8. நைததாஸ்சர்யம் ஆர்யயா யன்மாம் த்வமனு பாஷஸே ।**
**விதிதம்து மமாப்யேதத் யதா நார்யா: பதிர் குரு: ॥**

நல்லொழுக்க சீலராகிய தாங்கள் என்னிடம் கூறிய வாக்கியங்கள் ஆச்சரியமானவைகள். கணவனே தெய்வம் என்று வாழும் பெண்களால் ஏற்கனவே இவைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**9. யத்யப்யேஷ பவேத்பர்த்தா மமார்யே வ்ருத்த வர்ஜித: ।**
**அத்வைதமுப சர்தவ்யஸ் ததாப் யேஷ மயா பவேத் ॥**

என்னைப் போன்ற கற்புடையப் பெண்களுக்கு நல்ல கணவனை அடைந்தவர்களுக்கு இரண்டாவது தடவை நினைவூட்டுவதாகவே இதை நான் கருதுகிறேன்.

**10. கிம் புனர் யோ குணைஸ்லாக்ய: ஸானுக்ரோ சோஜிதேந்த்ரிய: ।**
**ஸ்த்திரானுராகோ தர்மாத்மா மாத்ருவத் பித்ருவத் ப்ரிய: ॥**

பின் என்ன! குணவானும், பரிவுள்ளவரும், புலனடக்கம் உள்ளவரும், நிலையான பற்றுள்ளவரும், தர்மாத்மாவும், தாய் போலவும், தந்தை போலவும் உள்ளவருமான ஒருவர் விஷயத்தில் எப்படி தர்மம் மீறி நடக்க முடியும்.

**11. ஆகச்சந்த்யாஸ்ச விஜனம் வனமேவம் பஹாவஹம்**
**ஸமாஹிதம் மே ஸ்வஸ்ரவா ச ஹ்ருதயே தத் த்ருதம் மஹத் ॥**

ஜன நடமாட்டமே இல்லாத, பயம் நிறைந்த காட்டிற்கு வந்திருக்கிறோம். என்னுடைய பணிவிடையை ஏற்பதற்காக இந்த பயங்கரமான காட்டிற்கு வந்திருக்கிறார்.

12. **பாணிக்ரஹண காலே ச யத்புரா த்வக்னி ஸன்னிதௌ ।**
**அநுசிஷ்டா ஜனன்யாஸ்மி வாக்யம் ததபி மேத்ருதம் ॥**

கன்யகாதான காலத்திலே அக்னி முன்பு **'சா யேவ அனுகத சதா'** என்று சொன்ன வார்த்தையின் படியும், தாய் கணவனைத் தொடர்ந்து செல் என்று சொன்ன வார்த்தையின் படியும் பின்பற்ற வேண்டியவளாய் இருக்கிறேன். அவை மனதில் உறுதி கொண்டு விட்டன.

13. **நவீக்ருதம் ச தத்ஸர்வம் வாக்யைஸ்தே தர்மசாரி ।**
**பதிசுச்ரூஷணாந்நார்யா ஸ்தபோ நான்யத் விதீயதே ॥**

அம்மா! நீ புதுமை செய்துவிட்டாய். உன் வார்த்தைகளால் கணவனுக்கும் பணிவிடை செய்வதைவிட வேறு தவம் பெண்களுக்கு விதிக்கவில்லை என்று.

14. **ஸாவித்ரீ பதிஸுஸ்ரூஷாம் க்ருத்வா ஸ்வர்கே மஹீயதே ।**
**குதாவ்ருத்திஸ்ச யாதாத்வம் பதிஸ்ரூய தயா திவம் ॥**

ஸாவித்ரி பதிக்குப் பணிவிடை செய்தது ஒன்றாலேயே ஸ்வர்கத்தில் மகிமையாய் இருக்கிறாள். அதுபோல் பதி சிஸ்ருடியால் நீ கூட மேல் லோகம் அடையலாம்.

15. **வரிஷ்டா ஸர்வநாரிணாம் ஏஷா ச திவி தேவதா ।**
**ரோஹணீ ந வினாசந்த்ரம் முகூர்த்தபி த்ருஸ்யதே ॥**

ரோஹிணியானவள் தேய்பிறை வளர்பிறை இரண்டிலும் பிரியாது பணி செய்து ஒரு முஹூர்த்தம் கூட கணவனில்லாமல் காணப்படுவதில்லை.

(தொடரும்)

# மூக ஸாரம்

## இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த **ஸ்ரீ மூக கவியி**னால் இயற்றப்பட்ட **மூக பஞ்சசதியை** எல்லாரும் அறிவர்.
காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது **மூக பஞ்சசதி.**
அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை **'மூக ஸாரம்'** என்னும் தலைப்பில் மறைந்த **ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன்** தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**यस्या वाटी हृदयकमलं कौसुमी मोगभाजां**
**यस्याः पीठी सततशिशिरा शीकरैर्माकरन्दैः ।**
**यस्याः पेटी श्रुतिपरिचलन्मौलिरत्नस्य काञ्ची**
**सा मे सोमाभरणमहिषी साधयेत्काङ्क्षितानि ।। ७७ ।।**

யஸ்யா வாடீ ஹ்ருதயகமலம் கௌஸுமீ யோகபாஜாம்
யஸ்யா: பீடீ ஸததசிசிரா சீகரைர் மாகரந்தை:।
யஸ்யா: பேடீ ச்ருதிபரிசலந் மௌலிரத்நஸ்ய காஞ்சீ மௌலி
ஸா மே ஸோமாபரண மஹிஷீ ஸாதயேத் காங்க்ஷிதாநி।।77

*(ஸ்துதி சதகம் 77)*

*யோகிகளுடைய ஹ்ருதயத்தை புஷ்பத் தோட்டமாக உடையவளும், எப்போதும் தேன் பரவஹிக்கிறதால் குளிர்ந்ததான தாமரைப்பூ ஆஸனத்தை உடையவளும், வேதங்களின் சிரோரத்னமாக விளங்குகிறவளும், காஞ்சீபுரம் தனக்குப் பெட்டி போலுள்ளவளுமான அந்த சந்திரா பரண பரமசிவ பத்நியான காமாக்ஷிதேவீ எனது இஷ்டங்களை பூர்த்தி செய்ய வேணும்.*

ஸ்ரீக்ரோதி ஷூ மாசிமீ 4உ ஞாயிறு 16.2.2025 —
ஶாங்கர ஶம்வத்ஸரம் : 2533 அன்று
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு **ஸ்ரீ ஶங்கர விஜயேந்திர ஸரஸ்வதி**
**ஸ்வாமிகள் அவர்கள்**
**ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி** அம்பாளுக்கு தாடகங்கள்
ஜீர்ணோத்தாரணம் செய்விக்கப்பட்டு அவர்களது
திருக்கரங்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

# கும்பமேளா நிகழ்வு கட்டுரைகள்

# தாடங்க ப்ரதிஷ்டை — முன்னுரை

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியின் தாடங்கப் ப்ரதிஷ்டை வெகு விமரிசையாய் **ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்** திருக்கரங்களால் நடைபெற்றது. தாடங்கப் ப்ரதிஷ்டை மூலாம்னாய ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்திற்கு சரித்திர முக்யத்துவம் உடையது. சில துர்சக்திகளால் தடை செய்யப்பட்டு பல வருடங்களாக நீதி மன்றத்தில் வழக்குகள் நடந்தது. இறுதியில் காஞ்சீ மடம் சார்பில் வழக்கு வெற்றி பெற்றது. இளைய தலைமுறையினர் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதால் சில முக்யமான விஷயங்களைத் தருகிறோம். 1844 ஆம் வருடம் (குரோதி) அகிலாண்டேஸ்வரி அம்பாளின் தாடங்கங்கள் பழுதடைந்தது கண்டு அவைகளைப் புதுப்பிக்க காமகோடி பீடாதிபதியை கோயிலார் வேண்டினர்.

அதற்கு முன்னே ஸ்ருங்கேரி மடத்தார் தமக்குத் தான் உரிமை என்று சொன்னார்கள். வழக்கும் சதர் அமீன் கோர்ட்டில் தொடுத்தனர். எண் 95/1844. காமகோடி மடம் தமக்கே உரிமை என்று எதிர் வழக்காடியது. ப்ரதிவாதி காமகோடி மடம் 51 தஸ்தாவேஜுகளும் கோயிலார் 11 தஸ்தாவேஜுக்களையும் சமர்ப்பித்தனர். வழக்கு இரண்டாண்டு காலம் நடைபெற்றது. வாதியின் (ஸ்ருங்கேரி மடம்) வாதமும், ஆவணங்களும் சரியில்லை என்றும் தாடங்கப் ப்ரதிஷ்டை ஸ்ரீ காஞ்சீ மடத்திற்கே உண்டு என்று தீர்ப்பளித்தனர்.

வாதி இதை எதிர்த்து திருச்சி சிவில் கோர்ட்டில் அப்பீல் செய்தனர். அந்த கோர்ட்டும் கீழ்கோர்ட் தீர்ப்பு சரி என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தனர். மீண்டும் ஸ்ருங்கேரி மடத்தார் அக்காலத்தில் உயர்நீதி மன்றமான ஸதர் அதலத் கோர்ட்டில் அப்பீல் செய்தனர். கோர்ட்டார் ஆவணங்களையும் வழக்கையும் பரிசீலனை செய்து வழக்கினைத் தள்ளுபடி செய்தனர். (11 செப் 1848) இதற்கு மறு விசாரணை வேண்டுமென்று மீண்டும் மனு செய்தனர். கோர்ட்டார் மனுவை 30 அக்டோபர் 1848 இல் நிராகரித்தனர்.

தாடங்கப் ப்ரதிஷ்டைக்கு மூலாம்னாய ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தாருக்கே முழு உரிமை என்பது உறுதியாயிற்று. கிட்டத்தட்ட நான்கு ஆண்டு காலம் ஏற்பட்ட தடைகளைத் தாண்டி தாடங்கப் ப்ரதிஷ்டை நடந்தது. எனவே இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். இப்படிச் சிறப்புடன் கூடிய நிகழ்ச்சி ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாசார்யர்களால் அவ்வப்போது விமரிசையாக நடத்தப்பட்டது. இப்போதும் ஸ்ரீ விஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் 13 பிப்ரவரி அன்று நடத்தப்பட்டது. மற்ற விஷயங்களை தொடர்ந்து படிக்கவும்.

ஆதாரம் (குடந்தையுள் காஞ்சீ பக்கம் 86, 87, 88) வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்த விஷயத்தை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டி இந்த முன்னுரையைத் தருகிறோம். மேலே படிக்கவும்.

*(ஆசிரியர்)*

# தாடங்க ப்ரதிஷ்டை

கைலாஸவாஸியான ஸ்ரீபரமேஶ்வரன், 2,500 வருஷங்களுக்கு முன்னர் இப்பூவுலகில் ஸ்ரீ ஶங்கர பகவத்பாதாசார்யர்களாக அவதாரம் செய்து, பாரத தேசம் முழுதும் திக்விஜய யாத்திரையை மேற்கொண்டு, ஶைவம், ஶாக்தம், வைஷ்ணவம், காணபத்யம், ஸௌரம், கௌமாரம் ஆகிய ஆறு வகை பக்தி மார்க்கங்களை வேதநெறியின் அடிப்படையில் நிறுவி, அத்வைத ஸித்தாந்தத்தை நிலைபெறச் செய்து, காஞ்சீ திவ்யக்ஷேத்ரத்தில் ஸர்வக்ஞபீடமேறி, ஸ்ரீகாமகோடி பீடத்தை ஸ்தாபித்து, அதில் ஆசார்யராக வீற்றிருந்து, ஜகத்குருவாய் விளங்கி, லோகக்ஷேமத்தை அனுக்ரஹித்ததோடு அநேக மஹாக்ஷேத்ரங்களில் மஹாயந்த்ர ப்ரதிஷ்டைகளையும் செய்தருளியிருக்கிறார்கள். அதைக் கொண்டு தான் ஸ்ரீ ஆசார்யரின் பிருதாவளியிலும்

**सकलभुवनचक्रप्रतिष्ठापक श्रीचक्रप्रतिष्ठाविख्यातयशोलंकृतानाम्**

**(''ஸகலபு[4]வனசக்ரப்ரதிஷ்டாயுபக - ஸ்ரீ சக்ரப்ரதிஷ்டாயுவிக்யுயாத - யஶோ (அ)லங்க்ரு'தானாம்'')**

என்கிற விஶேஷமானது பழமையாக விளங்கி வருகின்றது.

அவ்விதம் ஸ்ரீ ஆதிஶங்கரர், தம் திருக்கரங்களால் ஸ்ரீசக்ரப்ரதிஷ்டை செய்துள்ள க்ஷேத்ரங்களுள், திருஆனைக்கா எனும் கஜாரண்ய க்ஷேத்ரமும் முக்யமான ஒன்றாகும். திருச்சிராப்பள்ளிக்கு அருகாமையில், திருவானைக்காவில் உபயகாவேரீ மத்தியில் வேதமே வெண்ணாவல் மரமாக நின்று, தவம் செய்வதாக ஸ்தல புராணம் கூறும். பஞ்சபூத க்ஷேத்ரங்களில் ஜலக்ஷேத்ரமாக சிறப்படைந்த திருவானைக்காவிலுள்ள ஸ்ரீ ஜம்புநாதஸ்வாமியின் ஆலயத்தில் பராசக்தியான, உலகன்னை ஸ்ரீ அகிலாண்டேஶ்வரீ எனும் நாமதேயத்துடன் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு விளங்குகின்றாள்.

ஸ்ரீ ஆதி ஶங்கர பகவத்பாதர், தமது தென்னாட்டு விஜய யாத்திரையில், ஜம்புகேஶ்வரத்திற்கு விஜயம் செய்த போது, ஜனங்களின் நன்மையை உத்தேசித்து, ஸ்ரீ அம்பாளுடைய ஸந்நிதியில் தபஸ்ஸிலிருந்து அம்பாளுக்கு நேர் அபிமுகமாக ஸ்ரீ மஹா கணேஶரைப் ப்ரதிஷ்டை செய்து, உக்ரமாக இருந்த அம்பாளை ஶாந்தமாக்கி,

ஶாந்தமான ஸ்ரீபரதேவதையின் கலையை நவரத்னமயமான இரண்டு ஸ்ரீசக்ரங்களில் ப்ரதிஷ்டை செய்தார்கள். அந்த இரண்டு ஸ்ரீசக்ரங்களுக்கே 'தாடங்கம்' (கர்ணாபரணம்) என்று பெயர். அவ்விரண்டு தாடங்கங்களையும் ஸ்ரீ ஆச்சார்யாள் அம்பாளுடைய திருச்செவிகளில் அணிவித்தார்கள். அத்துடன், தமது 'ஸௌந்தர்யலஹரீ' என்ற ஒப்பற்ற தேவீ ஸ்தோத்திரத்தின், 28வது ஶ்லோகத்தில் அமுதத்தைப் பெற தேவர்களும் அஸுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது, எழுந்த கொடிய விஷத்தை, உலகை ரக்ஷிக்கும் பொருட்டுப் பருகியும், ஸ்ரீபரமேஶ்வரன் ஜீவித்திருப்பது அம்பிகையின் தாடங்கங்களின் மஹிமையினாலேயே, **तव जननि ताटङ्कमहिमा (தவ ஜனனி தாடங்க மஹிமா)** என்று ஸ்ரீபகவத்பாதாசார்யாள் போற்றியுள்ளார்கள். ஸ்ரீ அகிலாண்டேஶ்வரியின் ஶக்தி முழுமையும் இவ்விரு ஸ்ரீசக்ர தாடங்கங்களிலேயே ப்ரதிஷ்டை செய்விக்கப்பட்டிருப்பதால், இத்தாடங்கங்களைச் சாற்றியே ஸ்ரீஅம்பாளுக்கு ஒவ்வொரு நாளும் நித்யபூஜை, உத்ஸவங்கள் நடந்து வருகின்றன. இத்தாடங்கப் ப்ரதிஷ்டையின் காரணமாக ஸ்ரீஆதிஶங்கரரின் அஷ்டோத்தரஶத அர்ச்சனைக் கோவையில் 'ஸ்ரீசக்ராத்மக தாடங்க போஷிதாம்பாமநோரதாய நம:' என்ற நாமாவளியும் விளங்குகின்றது. ஸ்ரீஅம்பாளுடைய அபிமுகத்தில் ஸ்ரீவிநாயகரின் அருகில் ஸ்ரீஆசார்யமூர்த்தியும் தவக்கோலத்துடன் இன்றும் எழுந்தருளியிருக்கின்றது இதற்குச் சான்றாக விளங்குகிறது. ஸ்ரீ ஆதிஶங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் இங்கு ஸ்ரீசக்ர தாடங்கம் ப்ரதிஷ்டை செய்தருளிய போது ஸ்ரீஅகிலாண்டேஶ்வரீ அம்பாள் ஸன்னதிக்குச் சமீபத்தில் ஸ்ரீ ஶங்கர மடமும், தோட்டமும் நிர்மாணம் செய்திருக்கும் வரலாற்றுச் செய்தி ஜம்புகேஶ்வரம் தேவஸ்தானத்தார் ஸமர்ப்பித்த பழைமையான ஆவணங்களில் காண்கிறது. இவற்றால் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம் ஸம்ஸ்தானம் மற்றும் ஸ்ரீமடத்தின் திருவானைக்கா ஜகத்குரு வித்யாஸ்தானம் ஆகியவற்றின் பண்டைய பாரம்பர்யத்தையும் நன்கு உணரலாம்.

இத்தகு பெருமையுடைய ஸ்ரீ சக்ர தாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம் செய்ய வேண்டிய காலங்களில் ஜகத்குரு ஸ்ரீ ஶங்கர பகவத்பாதாசார்யர்களின் அதிஷ்டானமாகிய ஸ்ரீகாஞ்சி காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞபீடத்தில் ஸிம்ஹாஸனாபிஷிக்தர்களாகத் திகழும், ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களே ஜம்புகேஶ்வரத்திற்கு விஜயம் செய்து, தாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம் செய்வித்து, மரபுவிதிப்படி மீண்டும் அம்பிகையின் திருச்செவிகளில் தாங்களே நேரடியாக

ப்ரதிஷ்டை செய்வது பாரம்பர்யமாக நடந்துவந்துள்ளது. ஸ்ரீ ஆதி ஶங்கரர் முதல் அவர் வழிவந்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் பன்முறை உரிய நேரங்களில் தாடங்கங்களை ஜீர்ணோத்தாரணம் மற்றும் ப்ரதிஷ்டை செய்து வந்துள்ளனர் என்பதை பழமையான வரலாற்று ஆவணங்கள் நமக்கு அறிவிக்கின்றன.

அவ்வாறாக அண்மை நூற்றாண்டுகளில் ஸ்ரீ அகிலாண்டேஶ்வரீ அம்பாளுக்கு செய்விக்கப்பட்ட தாடங்க ப்ரதிஷ்டை :-

- பொ.யு. 1686 அக்ஷய ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2195, 59-ஆவது ஆசார்யர்களான, ஸ்ரீபகவந்நாம போதேந்த்ரஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும்.
- பொ.யு.1757 ஈஶ்வர ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2266, 62வது ஆசார்யர்களான, ஸ்ரீசந்த்ரஶேகரேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும்.
- பொ.யு. 1846 பராபவ ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2355, 64வது ஆசார்யர்களான, ஸ்ரீசந்த்ரஶேகரேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும், அப்போது பூர்வாஶ்ரமத்தில் இருந்த 65-ஆவது ஆசார்யர்களான, ஸ்ரீஸுதர்ஸன மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் கைங்கர்யத்திலும்.
- பொ.யு. 1908 பிலவங்க ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2416, 68வது ஆசார்யர்களான ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும்.
- பொ.யு. 1923 ருதிரோத்காரி ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2432, 68வது ஆசார்யர்களான, ஸ்ரீசந்த்ரஶேகரேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும்.
- பொ.யு. 1992 ப்ரஜாபதி ஷு ஶாங்கர ஸம்வத்ஸரம் 2500, 69வது ஆசார்யர்களான, ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் மற்றும் 70வது ஆசார்யர்களான, ஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதீ ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாலும் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டுள்ளன.

ஸமீபகாலத்தில், ஸ்ரீ அகிலாண்டேஶ்வரியின் தாடங்கங்கள் சற்று ஜீர்ணமாயிருப்பதை தேவஸ்தான நிர்வாகிகளும், பூஜகர்களும், ஸ்தலத்தாரும், பாரம்பர்ய வழக்கப்படியே, மூலாம்நாய ஸர்வக்ஞ பீட ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ

ஶங்கராசார்ய ஸ்வாமிகளிடம் விக்ஞாபித்து, அவைகளை ஜீர்ணோத்தாரணம் செய்து, மறுபடி அம்பிகையின் கர்ணங்களில் ப்ரதிஷ்டை செய்ய வேணுமென்று ப்ரார்த்தித்துக் கொண்டனர். அவர்களின் ப்ரார்த்தனையை கனிவுடன் ஏற்று, தாடங்க ப்ரதிஷ்டார்த்தமாய் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாகிய ஸ்ரீமஹாஸன்னிதானங்கள் அவர்கள் விஜய யாத்திரையாய் புறப்பட்டு 'ஸ்மரணாத் அருணாசலே'' என்னும் பெருமையுடைய அருணாசல க்ஷேத்ரத்திற்கு விஜயம் செய்து, ஸ்வாமி தரிசனம் ஆகியவைகளைச் செய்து கொண்டு, தமது பூஜா பரிவாரங்களுடன் ஜம்புகேஶ்வர க்ஷேத்ரத்திற்கு ஸகல ஸன்னாகங்களுடன் 09.02.2025 அன்று மாலை விஜயம் செய்தார்கள். நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ க்ரோதி ஞு மாசி மீ 01 வ (13 பிப்ரவரி 2025 , ஶாங்கர ஸம்வத்ஸரம் 2533) வியாழக்கிழமையன்று மாலை தாடங்கங்களை தாமே கலாகர்ஷணம் செய்து, யாகசாலைக்கு தாடங்கங்களை தமது சிரசில் எடுத்து வந்து அதனுடன் கோவில் பண்டிதர் ஸ்ரீ ஆசார்யாள் கலாகர்ஷணம் செய்த கலசத்தைத் ஸ்ரீசரணர்களுடன் சேர்ந்து கொண்டுவர, யாகசாலைக்கு எழுந்தருளி, முதற்கால யாகசாலையை தொடங்கி வைத்தார்கள். அதன் பின்பு தாடங்க ஜீர்ணோத்தாரணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து ஸ்வஸ்திஸ்ரீ க்ரோதி ஞு மாசி மீ 04 வ (16 பிப்ரவரி 2025, ஶாங்கர ஸம்வத்ஸரம் 2533) ஞாயிற்றுக்கிழமை, க்ருஷ்ண பக்ஷ சதுர்த்தியும், ஹஸ்த நக்ஷத்ரமும் கூடிய ஆதித்ய ஹஸ்த அம்ருத ஸித்தி யோக புண்ய கால ஶுபதினத்தில், காலை 11 மணியளவில் யாகசாலைக்கு எழுந்தருளி 6ம் கால பூஜை, பூர்ணாஹுதி, தீபாராதனை ஆகியவைகளில் பங்கு கொண்டு அதன்பின், ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு யாகசாலையில் வைக்கப்பட்டிருந்த தாடங்கங்களை ஒரு வெள்ளித் தட்டில் வைத்து தமது சிரசின் மீது வைத்துக் கொண்டு, கலாகர்ஷணம் செய்யப்பட்ட கலசமும் உடன்வர ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ அகிலாண்டேஶ்வரி அம்பாள் சன்னிதிக்கு எழுந்தருளி தமது திருக்கரங்களால், ஸ்ரீ அம்பாளுக்கு தாடங்க ப்ரதிஷ்டையை செய்தார்கள். அன்று மாலை லோக க்ஷேமார்த்தமாக அன்னை ஸ்ரீ அகிலாண்டேஶ்வரிக்கு ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் தமது திருக்கரத்தால் கட்கமாலா, அஷ்டோத்தரம், த்ரிஶதி, ஸஹஸ்ரநாமம் ஆகியவைகளைச் செய்து எல்லோருக்கும் ஸகல ஶ்ரேயஸ்ஸுகளும் கிடைக்க ஸ்ரீ அன்னையிடம் ப்ரார்த்தித்தார்கள்.

# *ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பா ஸமேத ஸ்ரீகாயாரோஹணேஶ்வரர் திருக்கோவில் விஜயம் - 10.02.2025*

கடந்த 10.02.2025 அன்று காலை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாகிய பூஜ்யஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்கள் ஆசிகளுடன் ஸ்ரீநீலாயதாக்ஷி அம்பா ஸமேத ஸ்ரீகாயாரோஹணேஶ்வரர் திருக்கோவில் சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்று மாலை ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த திருவானைக்காவல், ஜகத்குரு வித்யாஸ்தானத்திலிந்து நாகப்பட்டினம் எழுந்தருளி, கோவில் செயல் அலுவலர், கோவில் சிவாசாரியர்கள் அனைவரும் ராஜ கோபுரம் வந்திருந்து பூர்ணகும்ப ஸ்வாகதம் அளிக்க, ஸ்ரீசரணர்கள் கோவிலுக்கு எழுந்தருளி முதலில் ஸ்வாமி சன்னிதி தரிஸித்தார்கள். அப்பொழுது ஸ்வாமிக்கு புதிய வஸ்த்ரம், இரண்டு ஸ்வர்ண வில்வம் சமர்ப்பித்தார்கள். அதன் பின்பு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமி சன்னிதிக்கு சென்று தரிசித்துக் கொண்டு சன்னிதிக்கு வெளியே உள்ள ஸ்ரீநிமிஷாம்பாளை தரிசித்தார்கள்.

அங்கிருந்து ஸ்ரீநீலாயதாக்ஷி அம்பாள் சன்னிதிக்கு சென்று தரிசித்துக் கொண்டார்கள். அங்கு அம்பாளுக்கு சௌபாக்ய திரவியங்கள், புடவை, இரண்டு ஸ்வர்ண காசுகள் சமர்ப்பித்தார்கள். அதன் பின்பு பஞ்சமூர்த்திகளை தரிஸித்துக் கொண்டு, வெளியே வந்து அங்கு குழுமியிருந்த பக்தர்கள் அனைவருக்கும் ப்ரஸாதங்கள் அளித்து அனுக்ரஹித்தார்கள்.

ஸ்ரீ மடத்திற்கும் இக்கோவிலுக்கும் பல நூற்றாண்டுகளாக இருக்கும் தொடர்பை பற்றி பேசினார்கள். 65வது பீடாதிபதியான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஸுதர்ஶன மஹாதேவேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகளும், 68வது பீடாதிபதியான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ர ஶேகரேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகளும் இவ்வூரில் சாதுர்மாஸ்ய வ்ரதம் அனுஷ்டானம் செய்ததையும், தமது குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகளுடன், தாமும் பூஜா பரிவாரங்களுடன் இவ்வூர் பெருமாள் கோவிலில் முகாமிட்டதையும் நினைவு கூர்ந்தார்கள்.

# புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் திருக்கோவில் விஜயம் - 11.02.2025



கடந்த 10.02.2025 அன்று காலை ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாகிய பூஜ்யஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்கள் ஆசிகளுடன் புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை ஸ்ரீமடம் முகாமிட்டிருந்த திருவானைக்காவல், ஜகத்குரு வித்யாஸ்தானத்திலிந்து நாகப்பட்டினம் ஸ்ரீநீலாயதாக்ஷி அம்பா ஸமேத ஸ்ரீகாயாரோஹணேஶ்வரர் திருக்கோவில் எழுந்தருளி, கோவில் தரிசனம் செய்துகொண்டு, மறுநாள் 11 - 02 - 2025 அன்று அதிகாலையில் புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன் கோவில் வந்தடைந்தார்கள்.

கோவில் வாயிலில் தஞ்சாவூர் ராஜா மற்றும் கோவில் சிவாசார்யர்கள் அனைவரும் குழுமி பூர்ண கும்ப ஸ்வாகதம் அளிக்க ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் ஸகலவித மரியாதைகளுடன் கோவிலுக்கு அழைத்து செல்லப்பட்டார்கள்.

ஸ்ரீமடத்தின் ஆச்சார்யரான ஜகத்குரு பூஜ்யஸ்ரீ பரம ஶிவேந்த்ர ஸரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகளின் சிஷ்யரான பூஜ்யஸ்ரீ ஸதாஶிவ ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளால் அடையாளம் காணப்பட்ட இக்கோவிலுக்கு தஞ்சாவூர் ராஜா குடும்பத்தினரின் குல குருவான ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவஶியம் கும்பாபிஷேகத்திற்கு எழுந்தருள வேண்டும் என ராஜா அவர்கள் நேரில் கேட்டுக் கொண்டதன் பேரில், வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகள் 11.02.2025 அதிகாலை கோவிலுக்கு வந்து அம்பாளை தரிஸித்து அனைவருக்கும் ஆசி வழங்கினார்கள்.

# மஹாகும்பமேளா ஸ்னானம் - 23.02.2025

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஶங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஶங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களாகிய பூஜ்யஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்கள் ப்ரயாகராஜில் நடைபெற்ற மஹா கும்பமேளாவில் 23.02. 2025 அன்று அவகாஹ ஸ்னானம் செய்தார்கள். தஞ்சை ஸாஸ்த்ரா பல்கலைக்கழக முகாமிலிருந்து அதிகாலையிலேயே தாமே செய்யும் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீசந்த்ரமௌலீஶ்வர ஸ்வாமி 3 கால பூஜைகளை முடித்துக் கொண்டு, ப்ரயாகராஜ் புறப்பட்டார்கள். அபிஜித் முஹூர்த்தம் எனப்படும் மத்யான ஸமயத்தில் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுடன் வந்திருந்த, கர்நாடகா மாநிலம் ஶகடபுரம் மடத்தின் ஸ்வாமிகளான ஸ்ரீக்ருஷ்ணாநந்த தீர்த்த ஸ்வாமிகளும் திரிவேணி சங்கமத்தில் கும்பமேளா ஸ்னானம் செய்தார்கள். அதனைத் தொடர்ந்து கங்கா தேவிக்கு பூஜைகள், சிறப்பு ஹாரத்தி செய்து, தானங்கள் ஆகியன அளித்தார்கள். ஸ்ரீ மடத்தின் பக்தர்கள் ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளின் வருகையை அறிந்து பெரும் திரளாக வந்திருந்து தாமும் ஸ்னானம் செய்தார்கள். அங்கு வந்திருந்த செய்தியாளர்களிடம், ''மஹா கும்பமேளா நிகழ்வானது தேஸத்தின் உலகளாவிய சொத்தாக விளங்கும் ஒற்றுமை மற்றும் செழுமையான கலாச்சாரத்தைப் ப்ரதிபலிப்பதோடு ஸநாதன தர்மத்தின் அடையாளமாகவும் திகழ்கின்றது'' என்று அனுக்ரஹித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீமடம் கும்பமேளா முகாமில் (டென்ட்) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மஹாருத்ர ஹோம பூர்ணாஹுதியில் கலந்து கொண்டு தரிசித்தார்கள். அவ்வமயம் ஸ்ரீ ஆச்சார்யாளின் வரவையொட்டி உத்திரப்ரதேஸ மாநில முதல்வர் ஸ்ரீயோகி ஆதித்யாநாத் அவர்களும் முகாமிற்கு வந்திருந்து, ஹோம பூர்ணாஹுதியில் கலந்து கொண்டு, ஸ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளை தரிஸித்து அனுக்ரஹம் பெற்றார். அப்பொழுது அவர் கூறுகையில்,'' ஸநாதன தர்மத்திற்கு எந்தவொறு நெருக்கடியானாலும் முதலில் வந்து நிற்பது ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆச்சார்யர்கள் தான். ஸ்ரீ ராம ஜன்ம பூமியானாலும் சரி, நேபாளம் ஆனாலும் சரி, ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தின் சேவையானது முதலானதும், முக்கியமானதுமாகும்'' என்றார்.